விசேஷ
விளம்பரத்திற்கு!

உ
சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ந் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு ஹூ வைகாசிமீ உக உ (1941 ஜூன் 5 வியாழக்கிழமை) [இலக்கம் கக]

விசேஷ
விளம்பரத்திற்கு!

தாய் மொழி

தி. நா. சுப்பிரமணியம்

முற்றொடர்

படித்தவர்கள் இத்தகைய புத்தகங்களைப் போற்றி வந்தாலும், பாமர மக்களிடையே அவை அதிகமாகப் பரவவில்லை.

கம்பரானவர் 'கேளீர், சக்கிரேஸ்வரே. இச்சிலம்பைத் தரிக்கின்ற உத்தமியைத் தாங்கள் தரிசிக்க வேண்டுமென்னும் விருப்பம் தங்களுக்குண்டாயிருந்தால் அழைப்பிக்கிறேன்' என்று சொன்னார் என்பதுபோல எளிய நடையில் அமைந்துள்ள புத்தகங்களை மக்கள் பெரிதும் விரும்பி வந்தனர்.

'அஹோ, வாரும் பிள்ளாய்.' என்று ஆரம்பிக்கும் முப்பத்திரண்டு பதுமைக் கதை, மதன காமராஜன் கதை, ராமாயணம், பாரதம், முதலிய 'குஜிலிக்கடை' கதைப் புத்தகங்களை ஜனங்கள் இன்றைக்கும் விரும்பி வாசித்து வருகிறார்கள் என்றால் அதற்கு முக்கியமான காரணம் ஒன்று இருக்க வேண்டும். ஆம். பேச்சு வழக்கை ஒட்டி எழுதப்பட்டிருப்பதே அக்காரணம். வாசிப்பவர்கள் அவற்றை எளிதில் புரிந்து கொண்டு அனுபவிக்க முடிகிறது. அம்மட்டிலோ? அத்தகைய நூல்களில் சிற்சில இடங்களில் காணப்படும் நகைவேகமும், கற்பனா சக்தியும் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன.

நிலைமை மாறிவிட்டது. பண்டிதர்களும் எளிய நடையைக் கையாள ஆரம்பித்து விட்டார்கள். முன்னர்க் காணப்பட்ட கரடுமுரடான நடை இப்பொழுது அரிதாகிவிட்டது. கடினமான நடையில் எழுதவேண்டும் என்ற நோக்கத்துடன் சிலர் ஒன்றிரண்டு இடங்களில் எழுதுவதைத் தவிர, பொதுவாக எளிய நடையே வழக்கில் உள்ளது.

'அதைக் கிழவன் பார்த்தான், கண்ணை மலர்த்தி நன்றாகப் பார்த்தான். ஓர் அழகிய இள நங்கையின் உருவம் அது. அவளது ஒய்யாரச் சிரிப்பின் சோபையை அது நன்றாக எடுத்துக்காட்டியது. கிழவன் அந்த வர்ண சித்திரத்திலே புதைந்திருந்த ஆற்றலை அளவிட்டுப் பார்த்தான். அவனுடைய உள்ளத்திலே பலபல உணர்ச்சிகள் உண்டாயின. ஒரு பெருமூச்சு விட்டான். அதில் எத்தனை உண்மை!' என்று எழுதுகிறார்கள் என்பதை நோக்கினால் மக்களிடையே ஏற்பட்ட மனமாறுதல் நன்கு விளங்கும்.

எளிய நடையில் எழுதுவது தான் மக்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியது. பழமையும் புதுமையும் கொண்ட எளிய நடையில் எழுத ஆரம்பித்த மறுமலர்ச்சி எழுத்தாளர்களே இத்தகைய நிலைமை ஏற்பட்டதற்குக் காரணபூதர்கள்.

அவர்கள் புகுத்திய முறைகளுள் மிகவும் முக்கியமானது ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளும் பாகத்தை, சம்பாஷணையைப் பேச்சுவழக்கை ஒட்டி அப்படியே எழுதுவதாகும்.

'அம்மா எங்கே?
'அம்மா சாதத்தை வடிச்சுண்டிருக்கா, அப்பா'
'சரி. இதோ வாரேன், போ . . . ,
'வாரேன்'
'வாரேன்னு, போடி உள்ளே.'

இவ்விதம் எழுதினால் அது வாசிப்பவர்களுக்கு ஒரு தனி உணர்ச்சியை உண்டுபண்ணுகிறது. கதாபாத்திரங்களின் மனோநிலை நன்கு வெளிப்படுகின்றது. அப்படியில்லாமல்,

'அம்மா சாதத்தை வடித்துக் கொண்டிருக்கிறாள், தந்தாய்,
'சரி, இதோ வருகின்றேன்' போ. வாருங்கள்.'
'வருகிறேன் என்றால்? போ உள்ளே'

என்று எழுதினால் அதே உணர்ச்சி ஏற்படுவதில்லை. உணர்ச்சியின் வேகம் மங்கிச் சப்பென்று போய் விடுகின்றது.

அன்றியும், இந்த முறையின் அந்தப் பாத்திரத்திற்கேற்ப அவர் அவர் நினைசரி பேசும் பாஷையை உபயோகிக்க முடியும். பேச்சு வழக்கில் இடத்துக்கு இடம் வேறுபாடு உள்ளதைப்போலவே, ஒரேயிடத்தில் வசிக்கும் பலவகை வகுப்பாருக்குள்ளும் வித்தியாசம் உண்டு. தமிழ் பேசுபவர்களுள், வடிச்சுக் கிட்டிருக்கா எடுத்துக்கிட்டுப்போ என்று சொல்லுவார்கள் ஒருவகையினர். மற்றொரு வகுப்பினர் அதே வார்த்தைகளை 'வடிச்சுண்டிருக்கா எடுத்துண்டுபோ' என்று தான் சொல்லுவார்கள். இந்த முறையில் எழுதினால் பேச்சு வழக்கைக் கொண்டு கதாபாத்திரம் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

'இங்கெ கொளத்து மவனே, அவ தான் சொக்கி' அவளைப் பார்த்திருக்கையிலே.... சேத்துக் கூடச் சுள்ளி பொறுக்க வந்தாளே... அவ அப்பங்காரன் வந்திருந்தான். உனக்கு அவளை புடிச்சுக் கட்டிப் போட்டுட்டா நல்லதுன்னுன், என்ன சொல்றே....'

என்று வரும் பகுதியைத் திருநெல்வேலி ஜில்லாவில் வசிப்பவர்கள் மட்டுமே நன்கு ரசித்து அனுபவிக்க முடியும். தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ளவர்கள் புரிந்துகொள்ள முடியுமே தவிர அனுபவிக்க முடியாது.

ஆனால்,

'என்ன அண்ணாச்சி, இல்லைக் நேரமில்லியா.

என்று வரும் பகுதியையோ அவர்கள் சந்தர்ப்பத்தை யொட்டியே அர்த்தம் செய்துகொள்ள வேண்டும். நேரம் என்ற வார்த்தை 'நேரம்' என்றதற்குப் பதிலாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்விதமான நிலைமை மாறிவிட வேண்டும். ஒரு தனிப்பட்ட பகுதியினருக்கு மட்டுமே விளங்கக்கூடிய வார்த்தைகளை விடுத்து எல்லோரும் எளிதில் அறிந்து அனுபவிக்கக்கூடிய வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டும்.

சம்பாஷணைகளில் பேச்சு வழக்கை முக்கியமான இடங்களில் மட்டுமே, உணர்ச்சியை உண்டாக்கி வேகத்தைக் கொடுப்பதற்காகவே உபயோகிக்க வேண்டும். முழுவதையும் அப்படியே எழுதினால் சலிப்பு உண்டாகிவிடும். படிப்பதற்கு வேண்டிய சுவாரஸ்யமும் கெட்டுவிடும்.

ஓர் ஆசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்.

“இதை ஜலவசதிக்காகப் பல இடங்களில் காணலாம். இவைகளில் ஜலம் எடுப்பவர்களைத்தான் காண முடியாது. .... பல சேரிகளிலும் குடியானத் தெருக்களிலும் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கிணறுகளை உபயோகப்படுத்தாமல் பாழடைய வைப்பது வருந்தத்தக்கது. கை வசதியாயிருக்கும் குட்டைகளை ஜனங்கள் உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். இது அறியாமையால் என்று சொல்லவும் முடியாது. சௌகரியம் என்ற பெயரை வைத்துக்கொண்டு ஏற்படும் சோம்பேறித்தனத்தால் தான் இது.”

இந்தப் பகுதியில் ஆங்கில நடையின் வாடை வீசுகிறது. ஒன்று இது ஆங்கிலத்தில் எழுதியதை மொழி பெயர்த்ததாக இருக்க வேண்டும். அல்லது தமிழ் நடையில் பழக்கமில்லாமல் ஆங்கிலத்திலேயே அதிகப்பழக்கம் உள்ள ஒருவரால் எழுதப்பட்டிருக்கவேண்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

ஜவஹர் கொடுத்த வாக்கு மூலம்

நகலை வைத்திருப்பது குற்றமாம்

அலகபாத்தில் பலருக்குத் தண்டனை

அலகாபாத் மே 30

அலகாபாத் முனிஸிபல்போர்டு தலைவர் ஸ்ரீமான் ஆர். என். பாகவின் குமாரர் ஸ்ரீமான் அஜாய் குமார பாக ஆக்ஷேபகரமான பத்திரங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு 9 மாதக் கடுங்காவல் தண்டனையும் 200 ரூபாய் அபராதமும் தவறினால் மூன்றுமாத அதிகத் தண்டனையும் விதிக்கப்பட்டார்.

பண்டித ஜவஹர் கோரக்பூரில் விசாரிக்கப்பட்டபோது அவர் கோட்டில் கொடுத்த வாக்குமூலம் ஆக்ஷேபகரமானதெனப் பாதுகாப்புச் சட்டப்படி பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வாக்குமூலத்தின் நகலை வைத்திருந்ததற்காக மிஸ்டர் சௌனாடிய பக்ஷ் சிங் மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனையும் 200 ரூபாய் அபராதமும் தவறினால் 2 மாத அதிகத் தண்டனையும் விதிக்கப்பட்டார்.

போலீஸ் சோதனை

அலகாபாத் ஜில்லா சத்தியாக்கிரஹக் கமிட்டிக் காரியாலயத்தில் பொலிஸார் சோதனையிட்டபோது, பண்டித ஜவஹர் கோட்டிற் கொடுத்த வாக்குமூலத்தின் நகல் பிரதிகள் 50-ம் விஞ்ஞாபனமே வாக்குமூல நகலும் கிடைத்தன. அந்தக் காரியாலயக் கிளார்க்கு ஸ்ரீ பகவதி பிரசாத்சிங்கும், அலகாபாத ஜில்லா சத்தியாக்கிரஹக் கமிட்டிச் சர்வாதிகாரி ஸ்ரீ ரூப நாராயண திருப்தியும் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு 9 மாதக் கடுங்காவல் தண்டனையும் 200 ரூபா அபராதமும், தவறினால் ஒருமாத அதிகத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

காங்கிரஸ் தீர்மானத்திற்கும் ஆக்ஷேபம்

யுத்த சம்பந்தமாகக் காங்கிரஸ் மஹாசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலும் ஆக்ஷேபகரமான பிரசுரம் என அலகாபாத்தில் ஒரு நீதிபதி அபிப்பிராயப்பட்டு இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி அத்தீர்மானத்தின் நகலை வைத்திருந்த ஸ்ரீ கோபாளசிங் என்பவருக்கு நான்கு மாதக் கடுங்காவல் தண்டனையும், 50 ரூபாய் அபராதமும் தவறினால் ஆறுவார அதிகத் தண்டனையும் விதிக்கப்பட்டார். அலகாபாத்தில் இன்னொருவருக்கும் இதே குற்றத்துக்காக இவ்வித தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றாலக் காட்சி

ஸ்ரீமதி வி. ராதாமணி

பெரியதொரு மலை. இரு புறமும் உயர்ந்து ஓங்கிய சரிவுகள்; அச் சரிவுகளின் மேலே வேங்கை மரங்கள் அடர்ந்து செழித்து வளர்ந்திருக்கின்றன. பக்கத்திலே சோலைகள்.

திருக்குற்றாலத்தைத் தரிசிக்கத் தொண்டர் குழாத்துடன் சென்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தூரத்திலிருந்து இக்காட்சியைக் காண்கிறார். கண்டவுடனே அவருடைய உள்ளத்திலே உவகை துள்ளுகிறது; அன்பு பெருக்கெடுத்தோடுகிறது; ஆர்வம் பொங்குகிறது. தம்முடன் உள்ள அடியார் கூட்டத்தை நோக்குகின்றார்:—

“தம்பலவர்களே, வாருங்கள். அதோ இருக்கிறதே அது தான் நமது குலதெய்வம் குடிகொண்டுள்ள கோயில் போலும். இதோ குன்றமும் சோலையும் சாரலும் கூடியுள்ள குற்றாலம் இதுதான்” என்கிறார்.

“வம்பார் குன்றம் நீடுயர் சாரல்
வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல
வண்டியாழ் செய் குற்றாலம்
அம்பால் நெய்யோ டாடல்
அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர்
போலுந் நமரங்காள்.

அருகு செல்கிறார் சம்பந்தர். குற்றால நாதர் திருவிழா. எங்கே பார்த்தாலும் மாவிலைத் தோரணம், கமுகதோரணம் கொடிகள் முதலியன. திருநீறணிந்து சைவப் பொலிவுடன் தொண்டர் கூட்டம் செல்கின்றது.

“பொடிகள் பூசித் தொண்டர் பின்
செல்லப் புகழ் விம்மக்
கொடிக ளோடும் நாள் விழ
மல்கு குற்றாலம்” என்கிறார்.

சண்பகக் கொடிகள் வேங்கை மரத்திலேறிப் பூக்கின்றன. கொல்லைகளிலே முல்லைகள் மெல்லென அரும்பி வாசத்தை வீசிக்கொண்டிருக்கின்றன.

“செல்வம் மல்கு செண்பகம்
வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும்
பீனுங் குற்றாலம்”

மேலும் செல்கிறார் சம்பந்தர். ஒரு பக்கத்திலே வாழை மரங்கள் குலை குலையாகப் பழங்களை ஈன்றிருக்கின்றன. மறு புறத்திலே பலா மா முதலிய மரங்கள் காய்த்துத் தொங்குகின்றன.

“பக்கம் வாழைப் பாய்கனி யோடு
பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி
தூங்குங் குற்றாலம்”

என்று குற்றாலத்தைச் சிறப்பிக்கிறார்.

மலைச் சாரல் பாய்ந்து வருகிறது ஒரு குரங்கு. அதன் வயிற்றிலே குட்டியொன்று. கண்ணெதிரிலே பட்ட வாழைப் பழத்தைத் தானுமருந்தித் தன் குட்டிக்கும் கொடுக்கிறது மந்தி. அதன்மீது சம்பந்தரின் பார்வை விழுகிறது.

“மலையார் சாரல் மகவுடன்
வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி
மாந்துங் குற்றாலம்”

என்று மகிழ்ந்து பாடுகிறார்.

மாலைக்காலம். வண்டுகள் குருந்த மரத்திலேறி மதுவுண்டு, 'செவ்வழி' என்னும் ராகத்தை அருமையாக இசைக்கின்றன. இது சம்பந்தரின் காதில் விழுகிறது.

“பெருந் தண் சாரல் வாழ்சிறை
வண்டு பெடை புல்கிக்
குருந்தம் ஏறிச் செவ்வழி
பாடுங் குற்றாலம்”

என்று பாடுகிறார்.

இவ்விதமாகப் பாடிக் கொண்டே ஞானசம்பந்தரும் அடியார் கூட்டமும் திருக்குற்றாலக் காட்சியைக் கண்டு வியந்து வியந்து இயற்கையிலே இறைவனைக் கண்டு இன்புறுகின்றனர்.

இம்மாதம் பத்தாந்தேதி மூலநட்சத்திரத்தன்று திருஞான சம்பந்த சுவாமிகளின் திருநாளாகும். அன்று சம்பந்தரின் தேவாரத்திலுள்ள இயற்கை ஓவியத்தைக் கண்டு இன்புறுவோமாக! —கலைசக்தி

கஷ்டகாலத்திலும் மனமிளகவில்லை

சங்கடத்துக்குக் காரணர் யார்?

எல்லைப்புறச் சகோதரர்கள்

அஹிம்ஸையே சுயேச்சைபெறத் தகுதியானவழி

பெஷாவார் மே 30—

பெஷாவாருக்கு 40 மைல் தூரத்தில் தாக்கர் என்ற விடத்தில் தியாகிகள் தினக் கொண்டாட்டம் நடந்தது. அக் கொண்டாட்டத்தில் எல்லைப்புறச் சகோதரர்களான கான் அப்துல் கபார்கானும், டாக்டர் கான் சாகிப்பும் கலந்து கொண்டனர்.

எல்லைப்புறக் காந்தி அங்கு பேசியதாவது:—

இந்தியாவில் மிக்க திறமை வாய்ந்த அஹிம்ஸா படை இருந்தாலொழிய இனி ஏற்படக் கூடிய கஷ்டமான நிலைமையை நாம் சரிவரச் சமாளிக்க முடியாது. துன்பமும் கஷ்டமும் மிகுந்த காலத்தில் மனமிளகுவது மனிதவர்க்கத்துக்கு இயற்கை. ஆனால், இந்த நெருக்கடியான காலத்திலும் இந்திய விஷயத்தில் பிரிட்டன் மனப்போக்கு மாறாமலிருப்பது ஆச்சரியமாக விருக்கிறது.

கர்னல் அமெரிக்குப் பதில்

பழைய பிரதம மந்திரி டாக்டர் கான்சாகிப் பிறகு பேசுகையிற் குறிப்பிட்டதாவது:—

நமக்குள்ளேயே நாம் ஓர் ஒப்பந்தஞ் செய்து கொள்ள முடியவில்லையென்றும் சாத்தியமாகாத சில கோரிக்கைகளை நாம் வெளியிடுவதாகவும் இந்தியா மந்திரி கர்னல் அமெரி கூறுகிறார். சாத்தியமாகாத நிலைமை உண்டுபண்ணியது யார்? அவ்வித கோரிக்கையை வெளியிடுவது யார்? அதற்கு நாமா காரணர்? பிரிட்டிஷார் உடந்தையாக விருப்பதால் தான் அவ்வித நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவுக்குச் சுயேச்சை வேண்டுமானால் வாய்ப்பேச்சில் வீரங்காட்டிப் பயனில்லை. அஹிம்ஸா முறையில் தக்கபடி நடந்தால்தான் சுயேச்சை கிட்டும். அப்போது நம்நாட்டில் நாம் மன்னர்களாக விருக்கலாம்.

பத்திரிகைக் கடுதாசிக் கட்டுப்பாடு

இந்திய அரசாங்கத்தின் உத்தரவு

சிம்லா, மே, 31

பத்திரிகைக் கடுதாசிக் கட்டுப்பாடு உத்தரவு ஒன்று இந்திய அரசாங்கத்தின் இன்றைய விசேஷகசெஸற்றில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுத்தரவின்படி ஜூன் 15ந் திகதிக்குப் பிறகு பத்திரிகைப் பிரசுராலயத்திலன்றி வேறு எவருக்கும் பத்திரிகைக் கடுதாசிகளை விற்பனை செய்யக்கூடாது.

இரண்டாவதாக அரசாங்கத்திடமிருந்து விசேஷ அநுமதிபெற்று வெளியிடும் அநுபந்தங்கள், ஆண்டுமலர்கள் ஆகியவற்றிற்கும் வழக்கமான பத்திரிகைகளுக்குமேயன்றிப் பத்திராதிபர்கள் எவரும் பத்திரிகைக்கடுதாசிகளை வேறு எதற்கும் உபயோகிக்கக்கூடாது.

பத்திரிகைக்கடுதாசியை விற்பனை செய்யும் வியாபாரிகள் தங்களிடமுள்ள 'ஸ்டாக்' பற்றிய விபரங்களையும் பத்திரிகைமுதலாளிகள் தங்களுக்குப் பத்திரிகைக் கடுதாசி எவ்வளவு செலவாகிறதென்ற விபரங்களையும் அறிவிக்கவேண்டும்.

கப்பல் தபால்கள் காணவில்லை

எதிரிகள் செயல் காரணம்

ஸிம்லா, மே 29-

சென்ற நவம்பர் 15-ந் தேதி முதல் டிஸம்பர் 2-ந் தேதி வரையில் இந்தியாவில் போடப்பட்ட மேல் நாடுகளுக்குச் சென்ற கப்பல் தபால்கள், பார்ஸல்கள் உட்பட, எதிரிகள் நடவடிக்கை காரணமாகக் காணாமல்போய்விட்டதாகத் தபால் தந்தி இலாகா டைரக்டர் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதாக ஒரு அறிக்கை கூறுகிறது.

ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரும் பைரவீ அம்மையாரும்

(வி. கந்தையா 'சிவபுரி' கல்லடி உப்போடை.)

[மனிதனது ஞான வளர்ச்சியைத் தடுக்கத்தக்கயாதொன்றும் மாதரிடத்து இயல்பாய் அமைந்திலது என்பதை, பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது வாழ்க்கையின்மூலம் உலகினர்க்கு எடுத்து விளக்கியிருக்கின்றார்.]

“வாராயின முலையாளொடு வானோர் தலைமகனும்
சீராயின தெய்வநன்னெறிகு தெய்வத் தண்ணக்குழாய்
தாராயினுந் தழையாயினுந் தண்கொம்ப தாயினுங்கீழ்
வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே.”

அன்றிரவு நல்ல பனிப் பெய்திருந்தது. அதனால் சூரியனின் கிரணங்கள் காலுகையில் பனித்துளி பொருந்திய இலை தளிகளெல்லாம் முத்துக்காய்த்த போல் திகழ்ந்தன. எனினும் ஸ்ரீ இராமகிருஷ்ணர் காளியன்னைக்குச் சூட்டுதற்கு மாலை தொடுத்தற்காக மலர் பறிக்கும் பொருட்டு அதிகாலையிலேயே பூஞ்சோலையிற் புகுந்தனர். அப் பூஞ்சோலை தக்கணேசுர ஆலயத்தின் ஒருபுறமாய், அவரிருக்கும் அறைக்குக் கொஞ்சத் தூரத்தில் இருந்தது. மாலைக்குப் போதிய அளவு மலர்களை, பூக்கூடையிற் பெய்துகொண்டு திரும்பினர்.

தக்கணேசுர ஆலயம் கங்கைக் கரையில் உள்ளதாகலின் அவ்வாலயத்தின் நீராடு துறைகளும், கங்கையிலேயே படித்துறைகளாற் சமைக்கப்பட்டிருந்தன. குருதேவர் வருங்கால் நகர்ப்புறத்தாரது ஓடமொன்று நதியினீரைக் கிழித்துக்கொண்டு சிறிய நீராடு துறையை நோக்கி விரைந்து வந்து கரை சேர்ந்தது. அதிலிருந்து ஒரு காரிகை இழிந்தனள். அவள் நாற்பது வயதுடையவளாயினும், அவ்வயதிற் கொவ்வா இளமையும், எழிலும், பேணுப்பெற்றியினமைந்த சூழலும் அமையினிற் செந்துவராடையுமுடையளுமாயிருந்தாள். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மனம் அவர்பால் ஈர்க்கப்பட்டமையின் உடனே விரைந்து தம் அறைக்குச் சென்றார். அங்கிருந்த இருதயர் என்பாரை நோக்கி நங்கையின் தோற்றத்தை வர்ணித்து அவளை அழைத்து வருமாறு வேண்டினர். தம்மையறியாத ஒரு காரிகையிடம் பேசுவதில் இவர் இத்தனைப் பரபரப்பு எய்தியது எங்ஙனென்று பின்னியாதலின், இருதயர் அவரை நோக்கி, “அவள் நம்மை இன்னாரென அறியாளாதலின் நான் அழைத்ததும் அவள் வரக்கடவளோ” என்றார். 'அவர் பாற் சென்று என்னைப்பற்றிக் கூறின் அவர் வருவர்'' என்று மட்டும் பதிலளித்தார் குருதேவர். இருதயரும் மறுமாற்றம் விளம்பாது மண்டபவாயில் சென்றடைந்து அங்கு வந்து நின்ற அவ்வம்மையாரிடம் இராமக்கிருஷ்ணர் சொன்னதைக் கூற அவரும் இணங்கிப் பின் சென்றார்.

பிராம்மணியார் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்டதும் ஆனந்த நீருகுத்து இனிய மென்குரலில் “என் மதலாய் நீ இண்டு இருக்கிறாயோ? கங்கைக் கரையில் ஓர் மருங்கே நீ உள்ளாய் என்பதை அறிந்து உன்னை நெடுநாள் தேடியலைந்தேன். இன்றே நின்னையும் கண்டேன்” என்றார் “அன்னையீர் யாங்ஙனம் அடியேனை அறிகுவீர்” எனக் குருதேவர் கேட்க, அம்மையார் “தேவியம்மையின் அருளால் உங்கள் மூவரைக் காணக் கடவேனென முன்னமே அறிவேன். இருவரை வங்காளத்திற் கண்டாயிற்று. இன்று நின்னையும் காணப்பெற்றேன் என்றார். அப்பால் அம்மையார் தாம் வங்காள தேச ஜெஸ்ஸோர் என்னும் ஜில்லாவில் அந்தணர் குடியில் தோன்றியவரென்றும், வங்காள தேசத்து மூன்று பெரியார் உதித்துள்ளார் என்பதையும், அவரில் ஒவ்வொருவர்க்கும் தாம் கூறவேண்டிய செய்தியொன்றுளதென்பதையும் தாம் பயின்ற யோகத்தின் வன்மையால் அறிந்திருந்தாரென்றும் கூறினர். இவ்வம்மையார் பெயரோ பைரவீ பிராமணி என்பது. இவர் நிரம்பிய ஞான அறிவுடையார். யோக சாதனங்களும் முறையே செய்து பயனடைந்தவர். ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு ஞானகுருவாய் இருந்தவர், அவர்க்கு அன்னைபோன்றும் இருந்தவர். குருதேவரும் இவரிடத்தே மதலை போன்றே ஒழுகிப் பெரும் பயனடைந்தார். இவ்வம்மையாரிடமிருந்து அவர் அடைந்த பேறு ஒவ்வொன்றும், அவரது வாழ்க்கையிலேயே எவ்விடத்துமில்லாத முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். பைரவீ அம்மையார் குருதேவருடனுறைந்த நாட்களில் நடந்த சில நிகழ்ச்சிகளை ஈண்டு அறிவாம்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் முதலில் அவரை நோக்கித் தாம் கடவுட் பக்தி மீதூருங்கால் உலகவுணர்விறந்து நிற்றலையும், தாம் பயின்ற யோகசாதனங்கள் ஒவ்வொன்றையும், உடல் முழுவதுமுள்ள நீங்காத பெரு வெப்பத்தினையும், ஆறுண்டுகளாகத் துயிலொழிந்த தன்மையினையும், விரித்துரைத்தார். உலகினரின் செயலுக்குத் தம் செயல்கள் முற்றும் வேறுபட்டிருத்தலின் தாம் உலகத்தவரால் பித்தனெனக் கூறப்படுவதையும், உரைத்த இவற்றுக்குக் காரணங்களை உரைக்குமாறு வேண்டினர். அக்காரிகையாரும், “மதலாய் நின்னைப் பித்தனெனக் கூறுபவரே பித்தராவர். கண்ணீர் மல்கல், உடல் நடுக்குதல், வியர்த்தல் முதலிய பத்தொன்பதுவகை மெய்ப்பாடுகளுடன் அகத்தே நிகழும் பிரேமபக்தியின் (விதிமுறையாயொழுகாது கடவுளை தமது நெருங்கிய சுற்றத்தாராகக் கருதி ஒழுகுதல், ஊற்றென இதயத்துப்பெருகும் பெருங்காதல் வயப்படுதலின் விதிகளையும் நியமங்களையும் மறப்பாராய்த் தமது நெஞ்சு தூண்டியவாறே புதுமையாகவும் அன்னார் ஒழுகுவர்.) பெருக்கமாகிய மஹா பாவமே நினது நிலை எனக் கூறியருளலும், குருதேவர் சற்று மனந் தேறினார்.

பிராமணியார் அன்று மதியம் கங்கைக் கரையில் உணவட்டுத் தம்முடன் கொடுவந்திருந்த ரகுவீரனின் சிலைக்குப் படைத்து அதன் முன்னர்த் தியானத்தமர்ந்தார். தற்செயலாய் அங்கு சென்ற ஸ்ரீராமகிருஷ்ணர், படைக்கப்பட்டிருந்த போனகத்தைப் பக்கத்திலிருந்து அயின்றுகொண்டிருந்தார். தியானத்திலிருந்து விழித்த அம்மையார் இதைக்கண்டு ஆனந்தமெய்தினர். அவர் தாம் தியானத்துக் கண்ட காட்சிக்கும், வெளியில் நடக்கும் செயலுக்குமுள்ள ஒற்றுமையே இதற்குக் காரணமாம். தாம் வணங்குந் தெய்வம் இராமகிருஷ்ணரிடத்து இருப்பதைக் கண்டு பெரும் இறும்பூதெய்தினர். தம் நிலை வரப் பெற்றவுடன் இராமகிருஷ்ணர் தாம் செய்த பிழையைக் கண்டு நாணி “நான் என்னையறியாது இயற்றமிதெனலே” என்று வினவினர். அம்மையார், இதனை நின்னுளே கலந்திருக்கும் இறைவனே செய்தனனென்பதைத் தியானத்தே கண்டேனென்று தேற்றி, அவருண்ட மிச்சிலை

தொடர்ச்சி 4ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு௵ வைகாசி௴ ௨௩௳ வியாழக்கிழமை

கிறீற் தீவின் முடிவு

பன்னிரண்டு நாட்களாகக் கோரமான யுத்தம் நடந்த பின் கிறீற்தீவு பகைவர் கைப்பட்டதாயிற்று. இதுகாறும் நடந்த யுத்தங்களுட் கிறீற்றில் நடந்த யுத்தமே மிகவுங் கோரமானதென்றும், பகைவர் சைநியத்திற்குப் பிருத்தானிய சைநியஞ் செய்த நஷ்டம் மிக அதிகமென்றும் ஆனாலும் பிருத்தானிய சைநியத்தைக் கிறீற் தீவிலிருந்து எகிப்திற்கு அகற்றவேண்டி ஏற்பட்டுவிட்டதென்றும் பிருத்தானிய சமாசார அதிகாரிகள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. கிறீற்றில் நின்று சமராடிய பிருத்தானிய வீரர் 15000 பேர் எகிப்திற்கு அகற்றப்பட்டதோடு அந்நாட்டிற் சமர்செய்து பின்வாங்கிய கிரேக்க சைநியமும் அதிகமாகுமென்று சொல்லப்படுகின்றது. மேலும் இந்தக் கிறீற் யுத்தத்தில் மாண்ட பிருத்தானிய சக்கராதிபத்திய சைநியங்களின் தொகையும் கிரேக்க சைநியங்களின் தொகையும் அதிகமென மதிப்பிடப்படுகின்றது. கிறீற்றிற்குப் போதிய ஆகாயப் படையைப் பிருத்தானியர் ஆபிரிக்காவிலிருந்து தருவித்தல் இயலாமலிருந்ததென்றும் பிருத்தானிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கிறீற் பகைவர் வசமானாலும் அங்கு நடந்த யுத்தத்திலே பிருத்தானியரும் கிரேக்கரும் பகைவருக்குப் பெருஞ் சேதத்தை விளைத்துவிட்டனரென்றதையிட்டு ஒரு ஆறுதல் உண்டு. பிருத்தானிய கிரேக்க போர்வீரர் பதினையிரம் பேர்வரையிற் பிடிக்கப்பட்டனரெனஜர்மனியர் கூறுகின்றனர். கிறீற்தீவு மத்தித்தரைக் கடலுக்கு ஒரு பிரதானமான ஸ்தானமென்பதுமெய். ஆனாலும் அத்தீவு பகைவர் கைப்பட்டமையினால் மத்தித்தரைக் கடலில் பிருத்தானியருக்கிருக்கும் படைவலி குறைந்துவிட்டதென எவரும் எண்ணிக்கொள்ளவொண்ணாது.

கிறீற்றில் ஜர்மனியர் படையெடுத்துச் சென்றமை பிருத்தானியாவையும் இப்படித் தாம் படையெடுத்துச் சென்று தாக்கி வெல்லலாமோ என்று அநுபவத்தில் அறிவதற்காகிய ஒரு சோதனையாகுமெனச் சிலர் சொல்லுகிறார்கள். அது உண்மையானால் ஜர்மனியர் தப்பாது அதிக பிரதிகூலம் அடையவேண்டி நேருமென்பது நிச்சயமெனலாம். கிறீற் தீவல்ல மகா பிருத்தானிய தீவு. பிருத்தானியருக்குரிய தரைப்படை கடற்படை ஆகாயப்படை மூன்றும் எந்நேரமும் இங்கிலாந்தைப் பாதுகாத்தபடியே நிற்கின்றன. மேலும் கிறீற்றில் பிருத்தானியர் அபசெயமடைந்தாரேனும் ஈருக்கில் இப்பொழுது சமாதானம் சேர்ந்ததும் அபிஸீனியாப் பகுதியில் தீவிரமாக வெற்றியடைந்து வருவதும் பிருத்தானிய பிரசைகளாகிய எங்கட்கு ஒரு பெரும் மன ஆறுதலல்லவா?

*

பொருட் காட்சியில் மதுபான முமா?

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நடைபெற்று வரும் "கார்னிவல்" எனப்படும் பொருட்காட்சிக் கொண்டாட்டங்களின் மேலான நோக்கம் இன்னதென்பதை இங்குள்ளாரும் பிறரும் நன்கு அறிவர்; இச்செயல் இராசவிசுவாசக்காரணமாக எழுந்த முயற்சியாகும். இந்தப் பொருட் காட்சிக் கொண்டாட்டத்தில் மதுபானத்தையும் ஒரு அம்சமாக அமைத்து நடத்தும் அதிகாரிகளை வைக்க முயன்றபோது கிறிஸ்து சமய போதகரும் பெரிய மனுஷனுமாகிய கனம் ஜேம்ஸ். S. மேதாவர்கள் மதுபானக் கடையை இந்த மேலான கொண்டாட்டத்திற் கொண்டு வந்து புகுத்தலது கூடாதென்று மேற்படி அதிகாரிகட்குப் பத்திரிகை மூலமாகப் பல நியாயங் காட்டி எழுதியிருந்தார். கனம் மேதா மாந்தியஸ்லர், உடுவில் விடுதிச் சாலைத் தலைமையாசிரியையாகிய மிஸ். L. G புக்வால்ற்றர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித் தலைமையாசிரியர் மிஸ்டர் உவில்லியம்ஸ் முதலிய சில அறிஞர்களும் அந்த இடத்தில் மதுக்கடை வைப்பதற்கு மாறாக நின்றார்கள். இப்படியான பொதுக் கொண்டாட்டங்களில், பெண்கள் சிறுவர் சிறுமியர் பள்ளிக்கூட மாணாக்கர்கள் பலரும் கூசாமல் வந்து கூடும் சந்தர்ப்பத்தில் இராசவிசுவாசமான ஒரு மேலான கருமம் நடக்குமிடத்தில மதுபானம் அறவே தவிர்க்கப்படல் வேண்டுமென்றும், அங்ஙனம் தவிர்க்கப்படாதொழியின் தாமும் தம்மைச் சேர்ந்த மாணாக்கர் முதலிய சற்சனரும் சமுகஞ் செய்ய முடியாதென அமைதக்க நியாயங் காட்டித் தெருட்டி எழுதியிருந்தார். ஆனால் அந்தப் பெரியார் சொல்லுவது இக்கொண்டாட்டத்தை நடத்தும் அதிகாரிகளின் செவிக்கு ஏறவில்லையென எண்ணக்கிடக்கின்றது. பொதுக்கருமத்தைச் செய்வோர் பெரியோர் கொள்கைக்கு மாறாக எதனையுஞ் செய்யவொண்ணாது; அப்படிச் செய்வதால் தாம் எடுத்த கருமத்திற்குத் தாமே இடையூறு தேடுபவராகின்றனர்; மதுபானமெனின்னே அதனைப் பருகினோர் அறிவைக் கெடுக்கும் இயல்புடையது. அங்ஙனம் தம் சுவய அறிவைப் பறிகொடுத்துத் தம்வயமின்றி மதுவயமாகி நிற்பார் கூட்டத்திற் பெண்கள் சிறு பிள்ளைகள் மாணாக்கர் மரியாதைக்குடன்பட்டோர் எவரும் வந்து சேரப் பயப்படுவாரன்றோ? இந்த நல்ல கொண்டாட்டத்தைத் தொடக்கி நடத்தும் அபிமானிகள் அறிஞர் கேட்டபடி மதுபானத்தை அங்கே அறவே யொழித்திருப்பின் இக்கொண்டாட்டம் சால்புடைத்தாகும்; இன்னும் அநேகர் இக்கொண்டாட்டத்திற் சமுகமாகிப் பொருளுதவி செய்திருப்பர்.

இது இப்படியாகக் கொழும்பைச் சேர்ந்த டெகிவலையி லிருக்குமொருவர் தாம் தம்மை யாழ்ப்பாணத்தவரெனக் குறித்து விட்டுத் தம் பெயரை வெளியிடாது ஒரு புனை பெயருடன் கனம் மேதாவர்களைக் கண்டித்து, கொழும்பிற் பிரசுரமாகும் தினசரியாகிய "அப்ஸேவர்" பத்திரிகையில் ஒரு கடிதம் விடுத்திருக்கின்றார். அவர் காட்டும் காரணங்களொன்றேனும் சிறிதும் பொருந்தாதவை; தர்க்க ரீதியற்றவை; அக்கடிதரின் விபரீத அறிவைக் காட்டிக் கொடுப்பவை. "வாலிபர்கள் இப்படியான "கார்னிவல்" கொண்டாட்டத்தில் மதுபானமிருந்தாற்றான் குடிக்கப் பழகுவார்கள் ஏனைய இடங்களிற் குடிக்கப் பழகமாட்டார்களா" என்று பெயரற்ற அக்கடிதர் வாதாட்டஞ் செய்கின்றார்.

அரசாங்கசபைப் பிரதிநிதிகள் வட்டாரப்பிரதிநிதிகள் முதலியவர்களைத் தெரிதல் செய்தற்கான முயற்சிகளைச் செய்யுங் காலத்திலும் படக்காட்சிகளிலும் இடைக்கிடை நிகழும் இப்படியான பொருட்காட்சிக் கொண்டாட்ட நேரங்களிலும் மதுபானத்தை முன் பழகாதவர்கள் தாமும் பழகிக் கொள்ளுகிறார்களென அநுபவமுடைய பெரியோர் சொலக் கேட்டுள்ளோம். அந்த நியாயத்தினாலும் பொருட்காட்சிக் கொண்டாட்ட தானம் மதுக்கடை வைப்பதற்கு உரிய இடமன்றென்பது புலப்படுகின்றது. மேலும் அந்தக் கடிதர் இப்பொருட் காட்சிக் கொண்டாட்ட இடத்தில் மதுக்கடையிலலாவிட்டால், குடிக்க விரும்பியவர்கள் வேறெங்கேனும் குடித்து அங்கே வெறியுடன் வருவரென்று அடாத நியாயங் காட்டுகின்றார். வேறு இடங்களிற் குடித்துவிட்டு வருபவர்களுக்கு இத்தப் பொருட்காட்சி யதிகாரிகள் பொறுப்பாகமாட்டார்களோ வென்பதை அக்கடிதர் உணர்ந்திலர் போலும். வேறு இடங்களில் மதுக்கடையிருத்தலால் இப்பொருட்காட்சிமுன்றிலினும் மதுக்கடையிருக்கவேண்டுமென்ற நியதியில்லையாகும். என் செயலாம்! "தாய்க் கொலை சால்புடைத் தென்பாரும் உலகத்திலே உண்டல்லவா? கனம் மேதாவர்கள் தம்முடைய பெயரும் விலாசமுமிட்டுக் கடிதமெழுத, அவர் எழுதியவற்றிற்குக் கண்டனமெழுதப் புகுந்த அக்கடிதர் தம் உண்மையான பெயரை வெளியிடத் துணிவில்லாராய்க் காத்து நின்று புனை பெயருடன் நடையெழுதுகின்றார். இதனாற்றான் இக்கடிதரின் துராட்சேபத்திற்குக் கனம் மேதா விடையிறுத்திலர் போலும்.

அரிசி இறக்குமதிக்கும் அநுமதி நிபந்தனை

‘உள்நாட்டு அரிசியை வாங்கவேண்டும்’’

ஜூலை முதலிலிருந்து கையாளச் சிபார்சு

விளைபொருள்கள் சிலவற்றை இலங்கையில் இறக்குமதி செய்வதற்கு உள்நாட்டில் விளையும் அதே சரக்கை ஓரளவுக்கு வாங்கிக் கொள்ள வேண்டுமென்ற விதியை அரிசி இறக்குமதிக்கும் கொண்டுவர உத்தேசிக்கப்பட் டிருக்கிறது. விவசாயப் பொருட் கட்டுப்பாடு நிர்வாகசபையின் சிபார்சுக் கிணங்க அரிசி இறக்குமதிக்கும் இத்தகைமான கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதென விவசாய நிர்வாகசபையும் தீர்மானித்து விட்டது. இந்த முடிவை நடைக்குக்கொண்டு வருவதற்கான தீர்மானமொன்று அரசாங்கசபையிற் கொண்டுவரப்படும்.

அரிசி இறக்குமதியாளர்கள் இலங்கை அரசாங்க ஆலைகளிலிருந்து குறித்த ஓர் அளவுக்கு உள்நாட்டு அரிசியை வாங்கிக் கொண்டாற்றான் அவர்களுக்கு அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கான அநுமதி கிடைக்கும்.

இறக்குமதி செய்யப்படும் 100 மூடை அரிசிக்கு இலங்கை அரசாங்கத்தார் மில் அரிசி ஒரு மூடை என்ற விகிதத்தை ஏற்படுத்த வேண்டுமென விவசாயப் பொருட் கட்டுப்பாட்டுச் சபையார் சிபார்சு செய்திருக்கின்றனரெனத் தெரிகிறது.

உள்நாட்டு அரிசிக்குப் புசல் ஒன்றுக்கு ரூபா 5 அல்லது 2½ புசல் கொண்ட ஒரு மூடைக்கு ரூபா 12 சதம் 50 என விலை நிர்ணயிக்கப்படும்.

அநுராதபுரம், அம்பலாந்தோட்டை, மட்டக்களப்பு ஆகிய மூன்று இடங்களிலும் அரசாங்க அரிசி ஆலைகள் இருக்கின்றன. ஆகவே உள்நாட்டு அரிசி வாங்குபவர்களுக்கு மேற்படி மூன்று இடங்களிலும் அரிசி கொடுக்கப்படும்.

இந்தக் கட்டுப்பாடு எந்தத் திகதியில் நடைக்கு வருமென்பது அரசாங்கசபையில் வரவிருக்கும் தீர்மானம் நிறைவேறுவதைப் பொறுத்திருக்கிறது. ஆயின், ஜூலை மீ 1-ந் திகதியிலிருந்தே இது நடைக்கு வந்துவிட வேண்டுமென விவசாயப் பொருட் கட்டுப்பாட்டுச்சபை சிபார்சு செய்திருக்கின்றது.

விவாகம்

நிகழும் 1941-ம் ஆண்டு ஜூன் மீ 6-ந் திகதி இரவு 9 மணியளவில் திரு. N. கந்தசாமி அவர்களின் சிரேஷ்ட புதல்வி சௌபாக்கியவதி சரஸ்வதிக்கும் முல்லைத்தீவைச் சேர்ந்த திருவளர் செல்வன் K. தியாகராஜா அவர்களுக்கும் வண்கிழக்கு நாச்சிமார் கோவிலடி ரோட்டு—தலையாளியிலுள்ள மணமகளில்லத்தில் விவாகம் நடைபெறும்.

நண்பர்களும் சுற்றத்தவர்களும் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

Mis 44 5-6-41

வெயிலின் கொடுமையால் மரணம்

வந்தவாசி மே 30

25-ந் திகதியன்று அடுத்த அரக்கோரக்கோட்டையைச் சேர்ந்த ஆதிதிராவிடரும் ஏறக்குறைய 80 வயசுக் கிழவருமான ஒருவர் நடுக்குப்பம் அரிசி மில்லுக்கு எதிரில் உள்ள மைதானத்தில் வேறு ஊரிலிருந்து வரும்போது திடீரென மாண்டார்.

உலகம்பலவிதக் கதை

எந்தப்பெண்ணுக்குக் கல்யாணம்?

இராமன்: ஐயா, தங்களைக் கேட்கிறேன் என்று குறையெண்ணாதீர்கள்; கல்யாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களெல்லாஞ் செய்கின்றீர்களே; மூத்த தமக்கைச்சிக்கா இளைய தங்கைச்சிக்கா கல்யாணம் என்ற மூர்த்து உங்கள் வீட்டில் இருக்கும் எனக்குத்தானும் தெரியாமலிருக்கிறதே; அயலிலுள்ள ஆண்கள் பெண்கள் என்னைக் கண்டவிடத்தெல்லாம் யாருக்குக் கல்யாணம் முதலியாரின் மூத்த பிள்ளைக்கா இளையபிள்ளைக்கா என்று கேட்கிறார்களே; அப்படிக் கேட்பவர்களுக்கு நான் என்ன மறுமொழி சொல்வது? எந்தப் பெண்ணுக்கென்ற நிச்சயமிலலாமல் நீங்கள் கல்யாணத்திற்காகிய முயற்சி செய்கிறீர்களென உலகம் உங்கள் மேல் அபவாதஞ் சொல்லுகின்றது; அதைக் கேட்க எனக்கும் மனவருத்தமாக இருக்கின்றது; பெரிய தங்கைச்சிக்கு இன்னமும் நீங்கள் இயன்றவரையிற் புத்தி சொல்லிச் சம்மதிக்கச் செய்வதே நன்மையாகும்; என்னவோ நான் அதிகம் படியாத வேலைக்காரன், என் அறிவுக்கு எட்டியதைச் சொன்னேன். உலகமறிந்த உங்களுக்கு நான் ஏதும் சொல்லத் துணிவது பிழை.

இப்படி இராமன் சொல்லியவற்றைக் கேட்ட முதலியார் சிறிது நேரம் யோசித்துப் பெருமூச்சு விட்டுப் பின்னர் இராமனைப்பார்த்து "ராமன், நீ சொல்வது அத்தனையும் நிசம்; ஆனால் நான் என்ன செய்வேன்! இவ்வளவு காலமும் இந்த ஊரில மரியாதையுடனும் செல்வத்தோடு செல்வாக்குடனும் காலங்கழித்து வந்த எனக்கு இப்பொழுது பிறர் பரிகாசஞ் செய்யவும், அபவாதஞ் சொல்லவும் நேர்ந்துவிட்டது; இவைகளுக்கெல்லாம் காரணி என் இரண்டாந்தாரமாக வந்தவள். ஆனால் அவளை நான் நோவதும் புத்தியீனம்; எப்படியிருக்க அமைய நோவதால் ஆவதென்ன? எது நடக்கவேண்டுமோ அது நடந்தே தீரும். என் மூத்த மகளோ இனிமேலா நான் எவ்வளவு புத்தி சொல்லவும் கேட்கின்றிலள்; அவள் தன் மனசிற் பிடிவாதம் பூண்டுகொண்டாள். என் இளைய மகளும் இதற்கு உடன்படுவாளோ என்பது சந்தேகம்; ஆனாலும் தாய் தன் மகளை இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்கச் செய்வேன் என்று திடமாகச் சொல்லுகிறாள்; அவள் சம்மதித்தபின்தான் விவாகம் நிச்சயமென்று நம்பலாம்; இவைகளையெல்லாம் யோசித்து நான் பாய்மரத்துக் காகம்போல் பலவழியாலுஞ் சஞ்சலப்படுகின்றேன்; இதற்காகத்தான் இயன்றவரையில இரகசியமாக இச்சடங்கை நிறைவேற்றலாமென எண்ணுகிறேன்; தெய்வத்திற்கு இது சம்மதமானால நடைபெறும். இலலையேல எம்மால் என்ன செய்ய முடியும் என்று கண்களில் நீர் ததும்பக் கவலையுடன் சொன்னார்; கேட்ட இராமனுங் கவலைப்பட்டான்.

இந்தச் சம்பந்தம் உனக்குச் சம்மதந்தானே

"என் கண்ணே, சுந்தரம், இந்தச் சம்பந்தம் உனக்குச் சம்மதந்தானே" என்று குதூகலத்தோடு கேட்டாள் மங்களத்தம்மாள். "அம்மா, இந்த நல்ல கருமத்தில் நான் மாறுபடுவேனென்று நினைத்தீர்கள்; இதில நான் அடையும் சந்தோஷம்போல் நீங்களும் சந்தோஷப்படமாட்டீர்களே" என்று உவகையுடன் பதில் சொன்னாள் சுந்தராம்பிகை; "நல்லது மகளே, உன் அப்பர் உன் சம்மதத்தையும் கேட்கச் சொன்னார்; நீ இதற்குச் சந்தோஷமாக உடன்படுவாயென்பதை நான் முந்தியே அறிவேன்; உன் அப்பர் கேட்கச் சொன்னதினிமித்தம் உன்னையும் ஒருமுறை கேட்டேன்" என்று தாய் சொல்ல மகள் "ஏன், அம்மா, நான் இதற்கு மாறாக நிற்பேன் என்று எங்கள் ஐயா நினைத்தாரா? ஐயா அப்படி நினைக்கக் காரணமில்லையே, தம் பிள்ளையின் குணம் தமக்குத் தெரியாதா? என் அருமையான அக்கான் வேறு நான் வேறு என்று அவர் நினைத்துவிட்டாரோ? அப்படி எங்கள் அப்பர் எண்ணினால் அது எனக்கு அதிக கவலைக்கு இடமாகும்; அம்மா, நான் இதோ போய் என் அரிய அக்காளுக்கு இந்த மங்கல சமாசாரத்தைத் தெரிவித்துவிட்டு வருகிறேன்" என்று எழுந்தாள் சுந்தராம்பிகை. எழுந்த மகளைத் தாய் கையிற் பிடித்துத் தடுத்து "மகளே, உன் தமக்கைக்கு நீ இப்பொழுது ஒன்றும் சொல்லவேண்டாம்; அதனை நாங்களே அவளுக்குத் தெரிவிப்போம்; அவளும் இதற்கு உடன்படுவாள்; கண்ணே" என்று சொன்னாள். "அம்மா, என் அருமையான சகோதரத்திற்கு நடக்க இருக்கும் கல்யாணத்தைப்பற்றி அக்காளுக்கு இதுவரையிற் சொல்லாமல் மறைத்து வைப்பானேன்? மணப்பெண் அறியாமல் கல்யாணத்திற்கு ஆயத்தஞ் செய்வது எந்த ஊர் வழக்கம் அம்மா" என்று சுந்தராம்பிகை ஆத்திரத்துடன் கேட்டாள்; மங்களத்தம்மாள் இடியின் ஒலி கேட்ட சர்ப்பம்போல தன் மகள் சொன்ன வார்த்தையைக் கேட்டு ஏங்கியபடி சிறிது நேரம் யாதும் பேசாமல் இருந்தாள். தான் சொன்னது ஒன்று மகள் விளங்கியது பிறிதொன்று என்பதை மங்களம் அப்பொழுதுதான் உணர்ந்தாள். தன்னுடைய நோக்கத்திற்கும் தன் மகள் கொண்ட நோக்கத்திற்குமிடையேயுள்ள பேதம் இராவிற்கும் பகலுக்கு மிடையேயுள்ள பேதம்போல் ஆய்விட்டதென்று கலங்கினாள்; தன் அருமையான பிள்ளையின் உள்ளத்தை அமிர்தாம்பிகைதான் கலைவித்துக் கெடுத்துவிட்டாளென்று மங்களம் அநியாயமாக அவள்மீது அபவாதம் நினைத்தாள்.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததே

"ஐயோ, இதற்கென்ன செய்வேன்; வெண்ணெய்த் திரண்டுவரும் நேரத்திற் தாழி உடைந்தாற்போல் எங்கள் அவரும் மருமகனும் என்னோடும் உடன்பட்டுக் கல்யாணத்திற்கான கருமங்களைச் செய்துவரும் நேரத்தில என் பிள்ளை இப்படி நிற்கிறாளே, இது என்ன மோசமாயிருக்கிறது! இவள் அவளுடன் கூடிப் பிறந்தவளல்லவே; இவள் ஏன் அவள் புத்தியைக் கேட்டுக் கெட்டுப் போகிறாள்! அவள் கல்யாணஞ் செய்ய மறுத்தபிறகு தானே இவளுக்கு நிச்சயித்தோம். இவளைத் தான் நினைத்தபடி நடக்கவிடவொண்ணாது; இந்தக் கருமத்தில நானும் என்னால் இயன்றவரையில் முயற்சி செய்துதான் பார்க்கவேண்டும்; இவள் பொருட்டுக் கந்தருக்கு நான் கொடுத்த காசு கொஞ்சமா? ஆனாலும் இப்பொழுது இவளுடன் இதமாகத்தான் பேசிக் காரியத்தை நிறைவேற்றவேண்டும். இச்சிறு பிள்ளைகளோடு முரண்பட்டுக்கொண்டு எதனையுஞ் செய்ய முடியாது" என்று தன்னுள் எண்ணிக்கொண்டு தன் மகளை மங்களம் அன்புடன் பார்த்து ஆதரவோடு சொல்லுகின்றாள்:- "என் கண்ணே, பிள்ளைக் கலி தீர்க்கப் பிறந்த எங்கள் செல்வமே; உன் தாய் சொல்லைத் தட்டாதே; பெற்றவள் மனம் வருந்த ஒன்றுஞ் சொல்லாதே; உன் அக்காள் தனக்கு விவாகமே வேண்டாமென்று நிச்சயமாகச் சொன்னபிறகுதான், உங்கள் அரிய மைத்துனனைப் புறத்தியிற் போகவிடவொண்ணாதென நினைத்து உன் அப்பரும் நானும் சேர்ந்து இந்தக் கல்யாணத்தை உனக்கு ஒழுங்கு செய்தோம்; பெற்றோர்கள் பிள்ளைகளின் நல்ல வாழ்க்கையை விரும்பித்தானே எந்தக் கருமத்தையுஞ் செய்வார்கள்; அமிர்தம் கல்யாணஞ் செய்யச் சம்மதப்பட்டால் உன் அப்பர் அதற்கு மாறாக இருப்பாரென்று நினைக்கிறாய்; நானும் உன் அப்பரும் அவளை கேட்கக்கூடிய வரையிற் கேட்டுவிட்டோம்; அவளெனிலோ ஒரே பிடிவாதமாக "மாட்டேன்" என்று நிற்கிறாள். அதற்கு நாங்கள் என்ன செய்வோம்? நீயும் உடன்படாவிட்டால் முடிவென்ன? இப்படியே குமர்ப்பிள்ளைகளாக இந்த உலகத்தில் எத்தனை நாளுக்கு இருக்க முடியுமா? நீங்கள்தான் கட்டுக்காவலாக இருந்தாலும் இந்தப் பொல்லாத உலகம் உங்களைப் பழி சொல்லாமற் சும்மா விடுமென்று நினைக்கிறீர்கள்; என் கண்ணே, அருமை மகளே, வேண்டாமடியம்மா, இந்தச் சஞ்சல புத்தியை விட்டுவிடு உன் வாயைத்திறந்து "சம்மதந்தான்" என்று ஒரு வார்த்தை சொல்லிவிடு; நாங்கள் எல்லாரும் சந்தோஷமாகக் கருமத்தை நிறைவேற்றி வைப்போம்; உன் மைத்துனனும் சம்மதப்பட்டு நிற்கும் இந்தச் சமயத்தைத் தப்பவிட்டால் இனி உனக்குக் கல்யாணமே நடக்கமாட்டாது" என்று பரிந்து சொன்னாள். "அது சரிதான், அம்மா, எங்கள் மைத்துனர் அக்காவை விடுத்து என்னைக் கல்யாணஞ் செய்யச் சம்மதித்துக்கொண்டாரா" என்று மகள் கேட்க, தாய், "ஆம் அடியம்மா, நான் செய்த பாக்கியந்தான் அவர் அதற்குச் சம்மதித்துக்கொண்டார்" என்று தாய் மகிழ்வுடன் சொன்னாள்.

சுந்தரம்: அம்மா, என் அருமையான அக்காள்மீது அவருக்கு நேர்ந்த வெறுப்பென்ன?

மங்களம்: வெறுப்பொன்றுமில்லை, மகளே, உன் அக்காள்தான் கல்யாணஞ் செய்ய மாட்டேனென்று மறுத்து நிற்பதால், பாவம், அவர் என்ன செய்வார் உன் விஷயத்திற் சம்மதித்தார்.

சுந்தரம்: நானும் மறுத்தால் அவர் என்ன செய்வார்? அம்மா.

மங்களம்: நீயும் மறுத்தால் அவர் வேறெங்கேனும் கல்யாணஞ் செய்துகொள்ளுவார்.

சுந்தரம்: அப்படியானால் நாங்கள் தம் சொந்த மைத்துனிமார் என்ற அந்தப் பற்றும் அபிமானமும் அவரிடத்தில் இல்லையென்பது வெளிப்படையாகத் தெரிகிறதல்லவா? என் அக்காள் விவாகஞ் செய்ய மறுத்தபோது, ஏன் அப்படி மறுத்தாள் என்றதையிட்டு அவர் நிர்க்கவிசாரித்து அறிந்துகொண்டுதான், பின்னர் எவளையும் மணஞ் செய்யச் சம்மதிக்கவேண்டும்; அது கிடக்க, அம்மா, என் அக்காள் எதற்காக விவாகஞ் செய்ய மறுக்கின்றாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

மங்களம்: ஓம், தெரியும், தனக்கு இல்லறவாழ்க்கையில் இஷ்டமில்லையாம்.

சுந்தரம்: அம்மா, அதை நீங்கள் நிசமென நம்புகிறீர்களா?

மங்களம்: உள்ளத்தில் எதனை வைத்துக்கொண்டு அவள் சொல்லுகிறாளோ அதைப்பற்றி நான் அறியேன்; அவள் சொல்வதைத்தான் நாம் நம்ப முடியும்.

சுந்தரம்: அம்மா, 'தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்று பாடல் படிப்பிற் சொல்லப்பட்டிருக்கிறது; என் அன்பான தமக்கை விவாகஞ் செய்ய மறுப்பதற்குள்ள உண்மையான நியாயம் உங்களுக்குத் தெரியும்; எனக்கும் விளங்கும். இருந்தாலும் நானே சொல்லிவிடுகிறேன்; எனக்கு நிச்சயித்திருந்த வரனின் கதி அதோகதியாய்விட்டதே; அதனால் நான் கவலைப்படுகின்றேனே, நான் இப்படியிருந்து கவலைப்பட என் அரிய உடன்பிறப்பாகிய தான் கல்யாணம் முடித்துக் களித்திருப்பது முறையாகாதென்பதுதான் என் தமக்கையாரின் பிடிவாதம். அம்மா, இது தான் உண்மை, பெரிய அத்தானுக்கு என்னை விவாகஞ் செய்து கொடுப்பது பூரண சம்மதம்; இப்படிப்பட்ட அரிய உடன்பிறப்பிற்குத் துரோகஞ் செய்து நான் கல்யாணம் முடிக்கச் சம்மதப்படுவேனென்று நினைத்துக்கொண்டீர்கள். இது ஒருபோதும் முடியாது" என்று சொல்லி அழுதாள். கேட்ட தாய் திடுக்கிட்டாள்; வெகுண்டாள்; கைகளால் தன் தலையில அடித்தாள்; ஆத்திரப்பட்டாள்; மனங் கொதித்தாள்; "மயிலே, மயிலே ஒரு இறகு தா என்று கேட்டால் மயில இறகு தரப் போவதில்லை. மயிலை வலிந்து பிடித்து இறகைப் பிடுங்கினாற்றான் அது கிடைக்கும். ஆனபடியால் இனி இவளை நான் பலாத்காரமாக மணம் முடிக்க இணங்கச் செய்ய வேண்டும்; இல்லையேல் நான் மங்களத்தியல்ல" என்று மனத்தில் வைராக்கியங் கொண்டவளாய், "அடி சுந்தரம், உன்னை அந்த மூத்தவள் கெடுத்துவிட்டாள்; உன் வாழ்க்கைக்கு அவள் மண்போட்டுவிட்டாள்; அவளும் நீயும் நினைத்தபடி ஏதுஞ் செய்துவிடலாமென்று எண்ணிக் கொள்ளாதே; பிதா மாதாக்கள் பெரியோர் சொன்னபடி பிள்ளைகள் செய்தே தீரவேண்டும். சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேரப்போவதில்லை; உங்கள் செயலால ஒரு பழிவந்து சேருமாயின் அதனால் பழி சிறுமிகளாகிய உங்களைப் பாதிக்கப் போவதில்லை; எங்களையே பாதிக்கும்; நான் உன் அப்பரையும் இணங்கச் செய்ய, அவர் இணங்கிப் பணத்தையெல்லாம் கல்யாணவீட்டுச் செலவிற்கென்று இறைத்துவிட்டார்; எங்கள் மூத்த மருமகனும் எங்கள் சொல்லை நம்பி மேலதிகாரிகளிடம் விடுதலை பெற்று தாலிக்குக் கூறைக்குப் பெரும் பொருள் செலவிட்டுச் செய்ய வேண்டிய ஆயத்தங்களெல்லாஞ் செய்து தம் இனத்தவர் சினேகிதருக்கும் காரியத்தை வெளியிட்டுவிட்டார். இப்படியெல்லாம் ஆவயின் நீ உடன்படாமற் கல்யாணத்தைக் குழப்புவதென்றால், அந்த ஆணும் நானும் கிணற்றிலே ஆற்றிலே தான் போய்விழுந்து உயிர் விடவேண்டி நேரும்; ஆனதால், சுந்தரம், உந்த வீண் எண்ணங்களையெல்லாம் விட்டுவிடு; நான் சொல்லுகிறபடி நீ செய்யாவிட்டால் நீ எனக்குப் பிள்ளையுமல்லை; நான் உனக்குத் தாயுமல்லேன்" என்று கடிந்து அதட்டிச் சொல்லிவிட்டு அப்புறம் போய்விட்டாள்.

கலியாண வீட்டில் அழாதீர்கள்

சுந்தராம்பிகை, இப்படித் தன்னைத் தாய் ஏச முந்தி எப்போதாயினுங் கேட்டவளல்லள். அவள் ஏங்கி ஏங்கி இவள் விம்மி விம்மி அழுதாள் தனக்கும் மகளுக்குமிடையே நடந்த வாக்குவாதத்தைத் தாய் எவர்க்கேனும் வெளியிட்டாளல்லள். கல்யாண முகூர்த்தத்திற்காகிய ஆயத்தங்களெல்லாம் ஆய்விட்டன; திங்கட்கிழமை இரவு மூன்றுமணிக்குமேல் நிகழுஞ் சுபமுகூர்த்தத்திற் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அன்று பகல் 'சாமர்த்தி'யச்சடங்கு நெருங்கியஉறவினர் சமுகத்திற் சுந்தராம்பிகைக்கு நடத்தப்பட்டது. ஆனால் அவள் முகம் சந்தோஷத்துடன் காணப்படவில்லை யென்பதை அங்கே அச் சடங்கிற்கு வந்த பெண்களெல்லாரும் அவதானித்தார்கள். அமுதாம்பிகை மாத்திரம் சந்தோஷத்துடன் தன் தங்கைக்கு ஆகவேண்டிய கருமங்களைச் செய்து கொண்டு நிற்கக் காணப்பட்டாள். பகற்காலங் கழிந்து இரவு பத்து மணியானதும் முதலியாரும் நெருங்கிய உறவினராகிய ஆண்கள்பெண்கள் சிலரும் இரண்டு மோட்டார் வண்டியில் மணமகன் வீட்டிற்கு மாப்பிள்ளையை அழைத்துவரப் புறப்பட்டார்கள். விவாகக்கிரியை நடக்கும்போது பெண்வீட்டில் மாத்திரம் மங்கலவாத்தியம் ஒலித்தல் வேண்டுமெனவும் முந்தியேனும் பிந்தியேனும் வாத்தியங்கள் ஒலிப்பதில்லை யென்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. இரவு ஒரு மணி வரையிலாக மங்களத்தம்மாளுக்குத் தங்கை முறை பூண்ட ஒரு பெண் பதைபதைப்புடன் விரைந்து வந்து உறங்கிக்கிடக்கும் மங்களத்தை "அக்கா! அக்கா! எழுந்திருங்கள்" என்று சொல்லித் தட்டியெழுப்பினாள்; மங்களமுந் திடுக்கிட்டெழுந்தாள். எழுப்பிய பெண் மங்களத்தின் காதில் பதைபதைப்புடன் ஏதோ இரகசியமாகச் சொன்னாள். "ஐயோ! என் குடி முடிஞ்சுது" என்று கதறிக்கொண்டு மங்களம் தன் மகள் படுத்துக்கிடந்த அறைக்குள் ஓடிப்போனாள்; மகள் படுத்த படுக்கை வெறுமனே கிடக்கக் கண்டாள்; "ஐயோ! தெய்வமே! என்பிள்ளையைக்காணேனே" என்று கத்தினாள். "அக்கா! கல்யாணவீட்டில் கண்ணீர் விடாதீர்கள்; பிள்ளை எங்கே போகப்போகிறாள்; வளவிற் போயிருக்கக்கூடும், தேடிப் பார்ப்போம், கதறாதீர்கள்" என்று அந்தத் தங்கைமுறையானவள் சொல்லித் தேற்றினாள்; மங்களம் அமிர்தாம்பிகை படுக்கும் அறைக்குட் போய்ப்பார்த்தாள்; அங்கே அவளையுங் காணவில்லை; "ஐயோ! அமிர்தத்தையும் காணோமே" என்று மங்களம் சத்தமிட, தங்கைமுறை பூண்ட மற்றப் பெண் "இல்லை, அக்கா, வளவிற்குப் போகும்போது இரண்டு பேருங் கூடிக்கொண்டு போயிருப்பார்கள்; அக்கா, ஆத்திரப்படாதே, வெளிவந்தாற பழி" என்று சொல்லித் தடுத்தாள். "ராமன், ராமன்!" என்று சத்தம் போட்டுக்கொண்டு இராமன் வழக்கமாகப் படுக்கும் இடத்திற்குப் போனாள்; இராமனையுங் காணவில்லை; "ஐயோ! ஐயாவையும் மற்றவர்களையும் மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பிவிட்டுச் சற்று முந்தித்தானே வந்து படுத்து என்னையறியாமல் உறங்கிவிட்டேன்; இது என்ன அநியாயம்! கிட்டிலை சத்துரு என்பது மெய்யாய் முடிந்ததே" என்று கதறினாள். மங்களத்தின் ஓலத்தைக் கேட்டு அங்கே இருந்தவர்கள், உறங்கிக் கிடந்தவர்கள் எல்லாரும் வந்து கூடினர்.

(வரும்-)

பெண்கள் மகாநாட்டின் தலைவராகத் தெரிவு

பம்பாய் மே, 31

அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டு நிரந்தர நிர்வாகசபையின் இன்றைய கூட்டத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் டிஸம்பர் மாதத்தில் ஆந்திர தேசத்தில் நடைபெறவிருக்கும் அடுத்த மகாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இப்போதைய தலைவரான ஸ்ரீமதி இராமேஸ்வரி நேரு அவருக்கு அதுபற்றி ஒரு பாராட்டுத் தந்தி யனுப்பியிருக்கிறார்.

பல்வைத்திய விளம்பரம்

யப்பானியப் பல் வைத்தியரான எஸ். இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள திருச்செல்வம்பில்டிங்கில் 1941-௵ ஜூன்௴ 7-உ தொடக்கம் 16-ந் திகதிவரையில் பல்வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பார்.

(Mis 45. 5-6-41)

இரு புகைவண்டி நிறைய இத்தாலிய யுத்தக்கைதிகள்

பூஸா முகாமுக்குக் கொண்டு வரப்பட்டனர்

திருகோணமலையில் வந்திறங்கிய இத்தாலிய யுத்தக்கைதிகள் இரண்டு புகைவிரதங்களிற் பூஸாயுத்தமுகாமுக்குச் செல்லும் மார்க்கத்தில் சென்ற திங்கட்கிழமைகாலை கொழும்புக்கு வந்தனர்.

முதலாவது விசேஷ புகைவண்டி அதிகாலையிற் கொழும்பு வழியாகச் சென்றது. இதில் ஏறக்குறைய 600 கைதிகள் இருந்தனர்.

இவர்கள் திங்கட்கிழமைகாலை 6 மணிக்குப் பூஸாவில் புகைரதத்தை விட்டிறங்கினார்கள். அதே அளவு இத்தாலிய யுத்தக்கைதிகளை ஏற்றிச் சென்றமற்றொரு புகைவண்டி காலை 10 மணிக்குப் பூஸாவுக்குப் போய்ச் சேர்ந்தது.

யுத்தக்கைதிகள் வந்து சேர்ந்ததும் அவர்கள் முகாமுக்கு அணிவகுத்துச் சென்றனர். அங்கு அவர்களை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளும் தயாராயிருந்தன.

மற்றொரு இத்தாலிய யுத்தக் கைதிகள் கோஷ்டி விரைவில் இலங்கைக்கு வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தெல்லிப்பழை கிழக்கு சைவ வாலிபர் சங்கம்

12-வது ஆண்டு நிறைவுவிழா

மேற்படி சங்கத்தின் 12-வது ஆண்டு நிறைவுவிழா சென்ற வெள்ளிக்கிழமை வைகாசி மீ கஉ-ம் திகதி (30-5-41) பிற்பகல் 6-30 மணியளவில், தெல்லிப்பழை கிழக்குச் சைவப்பிரகாசவித்தியாசாலை மண்டபத்தில் திருவாளர் பொன். அம்பலவாணர் தலைமையில் கூடியது. கூட்டம் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயதும் வந்தவர்களை சாரப்பாக்கள் படித்தார், காரியதரிசி வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல், தனாதிகாரி வருடாந்த வரவு செலவு விபரம் சமர்ப்பித்தல் ஆதியாம் விஷயங்கள் நடைபெற்றன. பின்னர் தலைவர் அவர்கள் தமது முன்னுரையில், சங்கத்து வேலைகளைப் பாராட்டியும், இன்னமும் மேலதிகமான தொண்டாற்றுதற்குப் பெரியோர்புள்ளவர்களின் பணவுதவியின் அவசியம் பற்றியும், சங்கம் கைக்கொள்ள வேண்டிய சில அத்தியாவசிய முறைகளைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினர். அதன் பின்னர், திரு. இராமச்சந்திரன் அவர்கள் "சைவ நெறியும் தமிழ் நெறியும்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு, சைவசித்தாந்தம், தத்துவங்கள், தமிழ்மொழி என்னும் துறைகளில் மிகவும் ஆழமான விஷயங்களைச் சபையோர் இலகுவில் அறியும் வண்ணம் எண்ணிறந்த மேற்கோள்களுடன் விளக்கினர். அடுத்ததாக, மேற்படி சங்க அங்கத்தவருள் ஒருவராகிய திரு. பொ. கனகரத்தினம் அவர்களால் "இசை இன்பம்" என்னும் விஷயம் எடுத்தாளப்பட்டது. 3-வது உபந்நியாசகராகிய ஸ்ரீமான் மு. ஞானப்பிரகாசம் அவர்கள், B.A., B.Sc; "உண்மை வாழ்வு" என்னும் பொருள் பற்றி, எங்கள் சீவியம், மூதாதையர் சீவியம், உண்மை வாழ்வு, போலி வாழ்வு, சிக்கன சீவியம், ஆடம்பர சீவியம், என்பனவற்றை நன்குவிளக்கியும், விபூதி, பஞ்சாட்சரம், பெரியோர் உறவு, என்பனவற்றின் தன்மையையும், அவற்றுலடையக்கூடிய பலன்களையும் பொருட்செலவின்றி யாவராலும் அடைய முடியும் என்பதையும், இச்சங்கம் முன்மாதிரியாக அவற்றைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் பேசினர்.

உபந்நியாசகர்களின் இடையிடையே மாணவர்களால் சங்கீதங்கள் இசைக்கப் பெற்றன. தலைவர் முன்னுரை கூறியதும், திரு. இ. சபாரத்தினம் அவர்களால் நன்றி கூறப்பெற்றதும் சுமார் 10 மணியளவில் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

சபையாருடைய வருடாந்தக் கூட்டம் முதல்நாள் இரவு மேற்படி வித்தியாசாலையில் நடைபெற்றது. அடுத்த வருட உத்தியோகத்தர் பின்வருமாறு:—

தலைவர் திரு. தே. மு. ஜெயரத்தினம், இணைக்காரியதரிசிகள் திரு. இ. நடராசா, திரு. இ. சபாரத்தினம், தனாதிகாரி திரு. மு. குணரத்தினம், உப தனாதிகாரி திரு. க. சதாசிவம், பத்திராதிபர்கள் (ஆங்கிலம்) திரு. ச. சிவசுப்பிரமணியம், (தமிழ்) திரு. பொ. கனகரத்தினம், நிருவாகசபைக்கு உத்தியோகத்தரைத் தவிர 7 அங்கத்தவர்கள் தெரியப் பெற்றனர்.

—நிருப.

யுத்த சேவைக்கு இலங்கைச் சாமான்கள்

இலங்கையில் யுத்தத்திற்குத் தேவையான சாமான்களை உற்பத்தி செய்ய அதிமும்முரமான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துவந்தபோதிலும் திட்டமான ஓடர்கள் மிகக் குறைவாகவே இதுவரை கிடைத்திருப்பதாக விசாரத்ததில் தெரியவருகிறது. அண்மையில் டில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை நாடுகளின் யுத்தசப்ளை மகாநாட்டில் இலங்கைத் தூதுக்கோஷ்டி மரம் உதவுவதற்கு ஓடர்பெற்று வந்திருக்கிறது.

ஓர் உயர்தர ஸிவில் உத்தியோகஸ்தர் பொறுப்பில் விசேஷயுத்தசப்ளை இலாகாஒன்றை இலங்கை அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கின்றனர். இலங்கையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி யுத்தசப்ளைச் சாமான்களை எவ்வளவுதூரம் திறமையாக உற்பத்திசெய்யலாமென்பதைப் பரிசீலனைசெய்வதற்கு ஒருவிசேஷ உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பட்டுக் கடமையாற்றி வருகிறார். யுத்தசாமான்களைத் தயாரிக்க இலங்கையிற் பாராட்டத்தக்க தொழிற்றிறமையிருப்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இதுசம்பந்தமாக டில்லி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் மேற்படி மகாநாட்டைச் சேர்ந்த மற்றும் தேசங்களைப்போல் இலங்கைக்கும் உரிய ஓடர்கள் கிடைப்பதாகத் தெரியவில்லை.

இலங்கையின் நலவுரிமைகளைக் கவனிப்பதற்கு டில்லியிலொருவரில்லாமையால் இவ் அலட்சியம் ஏற்பட்டிருக்கக்கூடுமோவென்று கருதப்படுகிறது.

மேலும் இப்படி இலங்கை அலட்சியம் செய்யப்படுவதால் பம்பாயிலுள்ள வர்த்தகக் கோம்மிஷனர் டில்லியுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவோ அல்லது இலங்கையிலிருந்து ஒரு விசேஷ பிரதிநிதியை அனுப்பவோ அரசாங்கம் ஆலோசிக்கக்கூடும்.

பர்மாப் பழைய மந்திரி கைது

மாண்டலே மே 30

பர்மாவின் பழைய பொக்கிஷ மந்திரி பா-தீ என்பவர் இன்று [illegible] ரெகுலேஷன்படி கைது செய்யப்பட்டார். இவருக்கும் பிரதம மந்திரிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் இம்மாத ஆரம்பத்தில் கவர்னர், பா-தீ-என்பவரைப் பதவியிலிருந்து நீக்கி விட்டார்.

விளம்பரம்

யாழ்ப்பாணம், நல்லூர் கல்லியங்காடு சிவக்கொழுந்துஅருளம்பலத்தம்பிரான் ஆகிய நான் இத்தால் சகலருக்கும் தெரிவிப்பது சிதம்பரம் ஸ்ரீபரராசசேகரராசாவின் கட்டளை மடதருமத்துக்கும் சிதம்பரம் அம்பலவாண சுவாமிக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னோரால் கொடுபட்ட சகல அசைவற்ற ஆதனங்களுக்கும், என்னுடைய முன் சந்ததியாரும் தற்காலம் நானும் டிறஸ்தியாய் இருந்து சகலத்தையும் கிரமமாகப் பார்த்துப் பராபரித்து வருகிறபடிக்கு என்னிற் பிற்காலம் என்னுடைய மகன் முறையான வை. சிவஞானம் சிவக்கொழுந்து என்பவரை டிறஸ்தியாக 1940-ம் ஆடு தைமீ 22ந் திகதி கோத்தாரிசு மயில்வாகனம் இரத்தினசிங்கம் முகதாவில் 414-ம் இலக்கத்தில் நிறைவேறிய டிறஸ்தி நியமன உறுதிப்படி நியமித்தேன். குறித்த சிவஞானம் சிவக்கொழுந்து என்பவர் தற்போது குறித்த டிறஸ்தி நியமனத்துக்கு தகுதியற்றவர் எனக்காணப்படுகிறபடியால், 1941-ம் ஆண்டு வைகாசிமீ 15-ந் திகதி கோத்தாரிசு க. வீ. சின்னத்துரை முகதாவில் 649-ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அழித்தல் அல்லது விலக்கல் உறுதிப்படி மேலே சொல்லிய 414-ம் இலக்க டிறஸ்தி நியமன உறுதியையும் அழித்து வை. சிவஞானம் சிவக்கொழுந்துவுக்கு அவ்வகையால் உள்ள டிறஸ்தி தத்துவத்தையும் அழித்து வை. நியமனத்தில் இருந்து அவரை விலக்கிவிட்டேன்.

ஆகையால் குறித்த சிவஞானம் சிவக்கொழுந்து என்பவர் என்னுடைய சம்மதமின்றி இதற்கு முன் செய்து கொண்ட சகல விஷயங்களும் இனி மேலும் அவர் செய்யத்துணியும் சகல விஷயங்களும் பெலனற்றவை யென்றும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

இப்படிக்கு

சிதம்பரம் ஸ்ரீ பரராசசேகர மகாராசாவினதும், வை. அம்பலவாண சுவாமியினதும், கட்டளை மடதருமத்துக்கு உரிய சகல தரும ஆதனங்களையும் பார்த்துப் பராபரிக்கும் டிறஸ்தி

சி. அருளம்பலத்தம்பிரான்
26.5.41

நல்லூர், கல்லியங்காடு
1941ம் ஆடு வைகாசிமீ 19௳
(Mis 43, 5 & 9.6.41)

ஹெஸ்ஸின் மனைவி அங்காராவில் உளரா

பழைய கிரேக்க மந்திரி நேரிற் கண்டதாகக் கூறுகிறார்

லண்டன் மே 21—

கிறிஸ்டோபர்பக்லே என்பவர் மே மாதம்19-ந் திகதி டெயிலிடெலிகிராப் பத்திரிகைக்குக் கேய்ரோவிலிருந்து பின்வரும் தந்திச்செய்தியையனுப்பினர்.

மெடாக்ஸாஸ் ஆட்சியில் பிரபலஸ்தர்களாக விளங்கியவர்களில் ஒருவரான மிஸ்டர் கோட்ஸியாஸ் ஏதென்ஸிலிருந்து நேற்றிரவு கேய்ரோவந்து சேர்ந்தார். அவரென்னிடம் சொன்னதாவது:—

இறுதிவெற்றி பிரிட்டனுக்குத்தான் என்பதில் எனக்குப் பரிபூரண நம்பிக்கைஉண்டு. பிரிட்டன் மெல்ல மெல்லத்தான் தனதுவேற்றுக்களை வெளிப்படுத்தும். ஆயின், பிரிட்டனின்பலம் தினந்தோறும் மேலும் அதிகரித்துவருகிறது. ஜேர்மனியின் பலம்பலநுட்பமான பாகங்களடங்கிய ஒருபெரியயந்திரத்தைப் போன்றிருக்கிறது. ஒருசிறியகல் அந்த யந்திரத்திக்குள் விழுந்து சிக்கிக்கொண்டால் அந்தஇயந்திரம் முழுவதும் செயலற்றுப்போகும்.

அக்கல் ஹெஸ்ஸாக இருக்கலாம். ஹெஸ்ஸை நான் ஜேர்மனியிற் பார்த்திருக்கிறேன். அவரைப் பைத்தியகாரனென்று கூறுவதைநான் நம்பவில்லை. அவருடையமனைவி அங்காராவில் வான்பேப்பனுடனிருப்பது உண்மை. அங்காராவில் அவளை நான் நேரிற்சந்தித்தேன். தான்ஜேர்மனியிலிருந்து ஸ்கோட்லந்துக்கு வருவதற்குச் சிலநாட்களுக்குமுன் ஹெஸ் தமது மனைவியை அங்காராவுக்கு அனுப்பிவிட்டார்.

ஹெஸ்ஸைவிடுத்து ஹிட்லரைப் பயித்தியகாரனென்று கூறுவது பொருந்தும்.

நாகபுரி சிறையில் உபவாசம்

நாகபுரி மே 31—

நாகபுரி சென்ட்ரல் ஜெயிலில் ராஜீயச் சிறைபாளர்கள் இன்று மீண்டும் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். 'ஸி' வகுப்புக் கைதிகள் தங்களுக்குக் கட்டில்வேண்டுமென்றும், வெண்ணெய் வேண்டுமென்றும் தங்கள் செலவில் பழம் உதவ வேண்டுமென்றும் கேட்டார்கள். இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவே இப்போது உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. "ஏ" வகுப்பு கைதிகளும் 'பி' வகுப்புக்கைதிகளும் கூட இன்று உணவு கொள்ள மறுத்துவிட்டார்.

9-ந்தேதியே இந்தக் கைதிகள் உண்ணாவிரதம் செய்தார்கள். அப்போது சில கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டன. மற்றும் சிலவற்றைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிற்றெட்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிற்றெட்டின் மனேஜர் பதவிக்கு மனுக்கள் அழைக்கப்படுகின்றன.

மனுச் செய்து கொள்வோர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறப்பாகக் கணக்குப்பார்ப்பதிலும்நல்ல அறிவுள்ளவர்களா யிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- மாசமொன்றுக்கு ரூபா 100 உம், வீட்டு வாடகையாக மாசமொன்றுக்கு ரூபா 25 உம் கொடுக்கப்படும். எதிர் காலத்திற் சம்பள உயர்வு கிடைத்தல் கூடும்.

வயசு:- மனுச் செய்து கொள்வோர் 30 வயசுக்கு மேற்பட்டவர்களாயும் 45 வயசுக்கு உட்பட்டவர்களாயும் இருத்தல் வேண்டும்.

சிக்கூரிற்றி:- தெரிவு செய்யப்பட்டோர் ரொக்கமாக 2,000 ரூபாவும், கடன் சுமத்தப்படாத அசைவற்ற ஆதனமாக 3,000 ரூபாவும் சிக்கூரிற்றி கொடுக்கக் கூடியவர்களா யிருத்தல் வேண்டும்.

மனுப்பத்திரங்கள் ஆங்கிலத்தில் எழுதப் பெற்றனவாய், பிறந்த திகதி தாரம், ஏதாவது வர்த்தக அநுபவம், சமீபத்தில் பெறப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்கள் முதலியவற்றோடு 1941-ம் ஆடு ஜூன் மீ 15-ந் திகதிக்கு முன், கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

அபேட்சகர்கள் எவ்விதமாகவேனும் எவரையேனும் கண்டு தமக்காக வேலை செய்யும்படி வேண்டிக் கொள்ளுதல் அவர் தகுதியற்றவர் என்று கொள்ளுதற்கு இடமளிக்கும்.

கௌரவகாரியதரிசி,
யாழ்ப்பாணம் - மலையாளப்புகையிலைக் கூட்டுறவு விற்பனைச்சங்கம் லிமிற்றெட்
3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,
29—5—41
Mis 40 2 & 5.6.41

வியாச்சியங்கள்

(நமது நிருபர்)

ஊர்காவற் றுறையில் நகைத் திருட்டு

திருடர் இன்னும் அகப்பட்டிலர்

3-6-41

வண்ணார்பண்ணை கிழக்கில் வசிப்பவரும் தற்போது ஊர்காவற்றுறையில் நகைக்கடை வைத்திருப்பவருமாகிய செல்லப்பா-இராசா சென்ற 1941-ம் ஆண்டு மேமீ 15-ந்திகதி இரவு தமது கடையில் வியாபாரத்திற்காக வைத்திருந்த ரூபா 2000 வரை பெறுமதியான நகைகளை ஓர் இரும்புப் பெட்டிக்குள் வைத்து அந்த இரும்புப் பெட்டியை வேறொரு மரப்பெட்டிக்குள் வைத்துப் பூட்டித் தனது அறைக்குள் வைத்தார். பெட்டி பூட்டிய திறப்பை நித்திரை செய்யும்போது தமது தலையணைக்குக் கீழ் வைத்து நித்திரை செய்தார். மறுநாட்காலை நித்திரைவிட்டெழுந்ததும், தமது அறைக் கதவுகள் திறந்திருந்ததையும் மரப்பெட்டி திறந்திருந்ததையும்கண்டு ஆராய்ந்து பார்த்தபோது நகைகள் வைக்கப்பட்ட இரும்புப் பெட்டி அங்கு காணப்படவில்லை. பின்னர், இரும்புப் பெட்டி தாம் வசித்த அறைக்குச் சிறிது தூரத்திலுள்ள ஓர் ஒழுங்கையில் வீசப்பட்டிருந்ததை அறிந்து அந்த இடத்திற்குச் சென்று பார்த்தார். இதன் பின்னர் இச்சம்பவம் பொலீசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலீசார் விசாரணை செய்து வருகிறார்கள். இன்னும் திருடரைக் கண்டு பிடித்துக் கொள்ளவில்லை என அறிகிறோம்.

நம்பிக்கை மோசடி வழக்கு

சண்டிருப்பாயில் நடந்த சம்பவம்

3-6-41

சண்டிருப்பாயில் வசிக்கும் நன்னியன்-சின்னப்பொடியன் தற்போது நல்லூர் வாசியும் தட்டார வேலை செய்பவருமாகிய சரவண முத்து-கந்தையா ரூபா 500 பெறுமதியான நகைகளை நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கை யாழ்ப்பாணம் நீதிபதி திரு. குவின்டன் பேர்னண்டோ முன்னிலையில் தொடர்ந்தான்.

நன்னியன் - சின்னப்பொடியன் கூறியவற்றின் சாராம்சமாவது:—

இந்த மாதம் 1-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (1-6-41) பகல் ஒரு பதக்கம் சங்கிலியையும் ஒரு சோடி காப்பையும் ஒரு பக்கத் தோடு சேர்ந்த அட்டியலையும் பழுக்கச் சுடுவதற்காக எதிரியிடம் கொண்டு சென்றேன். எதிரி நகைகளை என்னிடம் வாங்கினதும் அவற்றை நெருப்பில் வைத்துக் காய்ச்சினர். பின்னர்ப் பழுக்கச் சுடுவதற்கு வெடியுப்பு இல்லாமையால் தான வெளியிற் சென்று உப்பு வாங்கிவர வேண்டுமெனக்கூறி நகைகளைத் தன அறைக்குட் சென்று வைத்து விட்டு அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டார். நான் அங்கே இருந்தேன். இச்சம்பவம் பகல் 12 மணியளவில் நடந்தது. நான் இரவு 8 மணிவரையும் அங்கே இருந்தேன். எதிரி வீட்டிற்குத் திரும்பி வரவில்லை. என்னை என்னுடைய மருமகன் வேலன்-முத்தன் தேடி வந்தான். நான் அவனுக்கு நடந்தவற்றைக் கூறினேன். அவன் உடனே நல்லூர் விதானையாரிடம் சென்று அறிவித்தான். விதானையார் அங்கு வந்து எதிரி தமது நகைகள் வைக்கும் பெட்டியை விசாரணை செய்து எடுத்துக் கொண்டு என்னையும் கூட்டிக் கொண்டு பொலிஸ் நிலையஞ் சென்றார். அங்கே பெட்டியைத் திறந்து பார்த்தபோது பெட்டிக்குள் நகைகள் காணப்படவில்லை. என்னுடைய வாய்முறைப்பாட்டைப் பொலிசார் பதிவு செய்தனர். நானும் வேறுபேருமாக எதிரியைத் தேடிப் பார்த்தோம். எதிரியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது அறிந்த அளவில் எதிரி தன்னுடைய சொந்த ஊராகிய கோப்பாயில் இருப்பதாகவறிகிறேன்.

நீதிபதி எதிரிக்கு வருகிற 17-6-41-ந் திகதிக்கு வாறண்டு விட்டு வழக்கை மேல விசாரணைக்குத் தவணையிட்டிருக்கிறார்.

குடித்துவிட்டு எட்டுக் குத்துக் குத்தினன்

எதிரிக்கு மறியலும் அபராதமும் நன்னடத்தையும்

3-6-41

பூநகரி டிஸ்திரிக்கைச் சேர்ந்த ஞானிமடத்தடியில் வசிக்கும் செல்லன் - ஆறுமுகம் என்பவன் மதுபானம் உபயோகித்த பின்னர், அல்லூர்ச் சின்னன்-கந்தையன் என்பவனைக் கத்தியால் குத்தி எட்டுக் காயங்களை வருவித்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு நீதிபதி திரு. குவின்டன் பேர்னண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு எதிரிக்கு கடுமையாக எச்சரிக்கை செய்து கோடு முடியும் வரை மறியல் தண்டனையும் 100 ரூபா அபராதமும் 200ரூபாப்பிணையில் ஆறு மாதத்திற்கு நன்னடத்தைப்பிணையும் விதித்தார். எதிரி அபராதப்பணம் இறுத்தால் காயக்காரனுக்கு ரூபா 30 கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்ஜிய உரிமை

அதை அளிக்க வேண்டுமென்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உத்தேசம்

அரசாங்கத்தின் அதிகாரத்தின் பேரில் உதவி இந்திய மந்திரி அறிக்கை

லண்டன் மே 29—

"இந்திய அரசாங்கம், இந்தியரால், இந்தியருக்காக (லண்டனிலிருந்து அல்லாமல்) இந்தியாவிலிருந்தே நடத்தி வைக்கப்பட வேண்டு மென்பதுதான் நமது உத்தேசம்."

என உதவி இந்தியா மந்திரியான டெவான்ஷயர் பிரபு இன்று லீட்ஸ் சர்வகலாசாலையில் ஒரு பிரசங்கம் செய்கையில் தெரிவித்தார்.

அவர் அந்தச்சர்வகலாசாலையின் அத்தியட்சகர். தாம் அரசாங்கத்தாரின் பூர்ண அங்கீகாரத்தின் பேரிலேயே இவ்வனம் அறிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுவதற்கான முயற்சி கைவிடப்படமாட்டா தென்றும் அவர் தெரிவித்தார்.

யுத்த முயற்சிக்கு ஆதரவு

அவர் மேலும் கூறியதாவது:-

"இந்தியாவில் அரசியல் விஷயத்தில் பிளவுகள் இருந்த போதிலும் இந்திய சாம்ராஜ்யத்திலுள்ள மிக்க பெரும்பாலான ஜனங்கள் பிரிட்டிஷ் யுத்த முயற்சியை ஆதரித்து வருகிறார்கள். அபிஸீனியாவில் நடந்த போரில் இந்தியத் துருப்புகள் பெரும்பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இராக்கில் இந்தியப் படைகள் போராடி வருவதாலேயே அங்குள்ள நிலைமைபற்றி நமது கவலை குறைந்திருக்கிறது."

டெவான்ஷயர் பிரபு பொதுவாக யுத்தத்தைப் பற்றிப் பேசுகையிற் கூறியதாவது:—

"நமது எதிரிகளின் பலத்தைப் பற்றிக் குறைவாக எண்ணுவது முட்டாள்தனம். ஜெர்மனியர் மிருகங்கள். ஆனால், அவை மிக்க பலத்துடன் தீவிரமாகப் போராடக்கூடியவை. எனினும், நம் படையிற் சேர முன்வரும் பல்லாயிரக்கணக்கான விமானிகள் சுதந்திர புருஷர்கள் என்ற முறையில் எதிரிகளைவிட உன்னதமான பயிற்சியும், அதிகமான போர்த்திறமையும் கொண்டவர்களாக விளங்குவரென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். சாம்ராஜ்ய விமானிகள் பயிற்சித் திட்டம் இதற்குமுன் எந்தச் சமயத்திலும் எதிர்பார்க்கப்பட்டதைவிட இன்னும் பெருவாரியான முறையில் இப்போது நிறைவேற்றிவைக்கப்பட்டு வருகிறது."

மேஹர் பாபாவின் 16வது வருட மௌனம்

அடுத்த பிப்ரவரிமீ 15-ல் பேசுவாராம்

லக்ஷ்மணபுரி மே 31

சென்ற 16 வருஷங்களாகப் பேசாமலிருந்து வந்த மேஹர் பாபா அடுத்த பிப்ரவரி மாதம் 15-ந்திகதி பேசுவாரென்றும், உலகைக் காப்பாற்றுவதற்காக அவர் தக்க சமயத்தில் வந்திருப்பதாகவும் [illegible] புரிச்சர்வகலாசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஆசிரியர் டக்டர் ஸீ. டி. தேஷ்முக் அறிவித்தார்.

சர்வகலாசாலைக்கு லக்ஷரூபாய் நன்கொடை

ஆராய்ச்சித் துறையின் அபிவிருத்திக்கு உதவி

விளம்பரம் விரும்பாத பெண்மணியின் ஈகை

இலங்கையின் எதிர்காலச் சர்வகலாசாலைக்கு மகத்தான உபகாரம் ஒன்று செய்யப்பட்டிருப்பதாகச் சர்வகலாசாலைக் கல்லூரியின் தலைமையாசிரியர் டக்டர் ஜெனிங்ஸ் சென்ற திங்கட்கிழமை அறிவித்தார்.

ஒரு பெண் தனது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக ஆராய்ச்சி அபிவிருத்தியின் பொருட்டு ஒரு நிதியை நிறுவுவதற்கு ரூபா 100000 நன்கொடையளிப்பதாக வாக்களித்திருக்கிறார். குறித்தபெண் தமது பெயர் இப்போது வெளியாவதை விரும்பவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்விதம் வாக்குறுதி செய்யப்பட்டிருப்பதைத் தாம் வரவேற்பதாக டக்டர் ஜெனிங்ஸ் கூறினார். சர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்கு ஆராய்ச்சி வசதிகள் இல்லாத ஒரேயொரு குறை மாத்திரம்தான் இருக்கிறதென்றும் அதுவும் இப்பொழுது நிவிர்த்தியாகி விட்டதென்றும் அவர் குறிப்பிட்டார். அவர்மேலும் தெரிவித்ததாவது:—

"நன்கொடை யளிப்பவர் தமது வாக்குறுதியை ஜனங்களுக்கு அறிவிக்க எனக்கு அநுமதி தந்திருக்கிறார். ஏனெனில், மற்றவர்களும் தமது முன் மாதிரியைப் பின்பற்றுவார்களென்று அவர் கருதுகிறார். அரசியற் சட்டங்கள் வந்து போகின்றன. ஆயின், சுதந்திரமுள்ள சர்வகலாசாலைகள் என்றும் அழியாமல் நிலைத்திருக்கின்றன. இப்பொழுது செய்திருக்கும் வாக்குறுதி இலங்கைச் சர்வகலாசாலைக்கே யன்றிச் சர்வகலாசாலைக் கல்லூரிக்கல்ல. இப்பாகுபாடு நியாயமானதென்று நான் நினைக்கிறேன். அரசாங்க ஆதிக்கத்திலுள்ள எந்த ஸ்தாபனங்களுக்கும் பொதுஜனங்கள் நன்கொடை அளிக்கமாட்டார்களென்பது உலக அநுபவமாகும்."

தேகவியோகம்

காரையம்பதி கீழ்பால் வாசரும் காரை மாணிக்க வாசக வித்தியாலய உதவி ஆசிரியருமாகிய திரு. சி. கந்தப்பு ஆசிரியர் அவர்கள் தம்மைப் பீடித்த கட்டு வருத்தம் காரணமாக (1-6-41) சென்ற ஞாயிற்றுக் கிழமை சாயந்தரம் 5½ மணிவரையிற் சிவபதமுற்றார். இவர் இறக்கும் போது வயது 42. இவர் பயிற்றப்பட்ட 1ம் தராதரபத்திரமுடையவர். இவர் மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு எவ்வகையிலும் ஆலோசனை கூறும் ஓர் மதிமந்திரிபோன்றவர். இவருக்கு வயதிற் குறைந்த நாலு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையுமுண்டு. இவருடைய பிரிவு மனைவி, மக்கள், சுற்றமித்திரர்க்கு மாத்திரமன்றி இக்கிராமம் முழுவதுக்குமே வருத்தத்தைத்தரத்தக்க தொன்றும். கடவுள் அவருடைய மனைவி மக்களை ஆசீர்வதிப்பாராக.

—நிருப.

*

சென்ற மேமாதம் 12ந் திகதி வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்தவரும் மலாய்நாட்டுப் பென்ஷனருமாகிய திரு. S. குமரேசு அவர்கள் தம்மைப் பீடித்த நோய் காரணமாகத் தேகவியோக மெய்தினர் என்னும் துக்கச் செய்தியை இங்கு குறிப்பிட வேண்டியவர்களாகின்றோம். அவரைப் பிரிந்து வருந்தும் மக்கள் சுற்றத்தார் முதலிய அனைவர்க்கும் எம் அநுதாபம் உரித்தாகுக.

இலங்கையிற் கடுதாசிக் கட்டுப்பாடு

இறக்குமதியைக் குறைக்கத் திட்டம்

இலங்கையிற் பத்திரிகைக்கடுதாசியைத்தவிர மற்றைக் கடுதாசிகள் இறக்குமதியைப் பெரிதும் குறைப்பதற்கான ஒருதிட்டம் பற்றிஇறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகாதாரர் ஆலோசனை செய்துவருகின்றரென்று அறியப்படுகிறது.

யுத்தநிலைமையினால் கடுதாசி கிடைப்பது கஷ்டமாயினும் பொதுஜனங்களும் சிலபாடசாலைகளும் சிற்சில வர்த்தக ஸ்தாபனங்களும் கடுதாசி உபயோகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமலிருப்பதினாலும் இத்தகைய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

உலகம் முழுவதிலுமே கடுதாசிப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதைச்சில அரசாங்கப்பாடசாலைகளும் அரசாங்கத்தின் உதவிபெறும் பாடசாலைகளும் அறிந்துகொள்ளவில்லை என்றும் மற்றுஞ்சில வர்த்தக ஸ்தாபனங்கள் சாமான்கள் சுற்றிக்கொடுக்க உபயோகிக்கும் கழிவுகடுதாசிகளை வீண் போக்குவதாகவும் கருதப்படுகிறது.

சமீபத்தில் 10 லக்ஷம்ரூபாய் பெறுமதியுள்ள பழையபத்திரிகைக் கடுதாசி இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஆயின் உள்ளூரிற்கிடைக்கும் பழைய கடுதாசிகளைச் சாமான்சுற்றிக் கொடுப்பதற்கு உபயோகிக்கப் போதிய முயற்சி எடுத்துக்கொள்ளப் படுவதாகத் தெரியவில்லை.

இங்கிலாந்தில் இப்பொழுது அனுஷ்டிக்கப்பட்டுவரும் முறையிலேயே இலங்கையிலும் கடுதாசிக் கட்டுப்பாடு கொண்டுவரப்படுமென அறியப்படுகிறது.

புகைவண்டியிலிருந்து விழுந்து இறந்தார்

மிதிபலகையில்நடக்கும்போது நேர்ந்த விபத்து

சின்னபின்னப்பட்டுக் கிடந்த பிரேதம்

கந்தளை ஜூன் 3

றோயல் கடற்படைத் தொண்டர் 'திசேவ்' படையைச் சேர்ந்த [illegible] மிஸ்டர் எட்வேட் லயனல் ரூபன் என்பவரின் பிரேதம் ஞாயிற்றுக்கிழமை இரவு [illegible] மைப் புகைரத நிலையத்துக்குச் சமீபமாகப் புகைரதப் பாதை ஓரத்தில் சின்னபின்னப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பின்னர் அவரது இடது கால் பிரேதம் கிடந்த இடத்திலிருந்து 100 யார் தூரத்திற் கண்டு பிடிக்கப்பட்டது.

வியாங்கொடைக்குச் செல்வதற்காக மிஸ்டர் ரூபன் மருதானைப் புகைரத நிலையத்திற் புகைவண்டி ஏறினார். புகைவண்டி [illegible] நின்றதும் அவர்புகைரதத்தைவிட்டு இறங்கினர். புகைரதம் மீண்டும் புறப்பட்டபொழுது அவர் தாம் பிரயாணஞ் செய்த வண்டியல்லாத மற்றொரு வண்டியில் ஏறிக்கொண்டார். புகைரதம் போய்க்கொண்டிருக்கும்போதே அவர் மிதிபலகையில் இறங்கி அதன் வழியாகத் தாம் முதலிற் பிரயாணஞ் செய்த வண்டியைத் தேடிச் சென்றார். அவர் அவ்விதஞ் செல்லும்போது காலிடறிக் கீழேவிழுந்து காயமடைந்து மரணமானார்.

திடீர் மரண விசாரணை அதிகாரியான மிஸ்டர் ஓ. ஆர். பி. ஜயசிங்க நேற்று றுக்கமைப் புகைரத நிலையத்தில் விசாரணை நடத்தினர். காலஞ் சென்றவரின் மனைவி பிரசவத்திற்காக அவளது பெற்றோரின் வீட்டுக்குச் சென்றிருந்ததால் ஏறக்குறைய ஒரு மாதகாலமாக காலஞ்சென்றவர் தமது குடும்பத்துடன் வியாங்கொடையிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள பல்லலகொடை என்னும் கிராமத்தில் வசித்துவந்தாரென்றும் அவர்கள் நேற்றுக் கொட்டாஞ்சேனையிலுள்ள தமது வீட்டுக்குத் திரும்ப நினைத்திருந்தனரென்றும் விசாரணையிற் கூறப்பட்டது.

மிஸ்டர் ரூபன் சனிக்கிழமை சம்பளம் எடுத்தார். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிவரை படம் பார்த்துவிட்டு இரவு ஏறக்குறைய 9 மணிக்கு வியாங்கொடைக்குச் செல்வதற்கு மருதானையில் புகைவண்டி ஏறினர்.

விசாரணை முடிவில் மரண விசாரணை அதிகாரி விபத்தினால் மரணம் சம்பவித்ததென்று தீர்ப்புக் கூறினர்.

பம்பாய்க் கலகம் ஓய்ந்துவிட்டது

பம்பாய், மே 30—

பம்பாயில் இன்றுகாலை 11மணிக்குப் பிறகு எங்கும் சச்சரவு நடக்கவில்லை. வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனைகளும் அமைதியுடன் நடந்து முடிந்தன. இரவில் நெடுநேரம் வரை கலகம் நடந்ததாக எங்கிருந்துஞ் செய்தி எட்டவில்லை.

விஜயலக்ஷ்மியின் சிறை விஜயம்

பின்போட்டு வைக்கப்பட்டது

அலகபாத், ஜூன் 1-

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிதருக்குச் [illegible] அரசாங்கத்தார் எழுதியுள்ள கடிதத்தில் அங்கு இப்போது கூட்டம் மிக அதிகமாகவிருப்பதால் இச்சமயம் அவர் சிறைக்கு வருவது உசிதமல்லவெனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதலால் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி சிறை விஜயத்தைப் பின்போட்டு வைத்து விட்டார்.

தாய் மொழி

1-ம் பக்கத் தொடர்ச்சி

டும் என்பது நன்கு விளங்குகின்றது.

இத்தகையோர் எழுதுவதில் காணப்படும் இலக்கணக் குறைகளை அவர்கள் கொஞ்சம் கவனித்து எழுதினால் நீக்கிவிட முடியும்.

'இது...பல இடங்களில் காணலாம்' என்று உள்ள பகுதியில் 'இது' என்னும் வார்த்தைகளுப் பதிலாக 'இதை' என்று மாற்றிவிட்டால் போதுமானது. 'இதை ...பல இடங்களில் காணலாம்' என்ற பூர்த்தியான வாக்கியம் வந்துவிடுகிறது.

இதுபோன்ற சிறு குறைகளை எளிதில் மாற்றிவிட முடியும். அதேபோலத்தான் ஒருமை பன்மை மயக்கமும்.

'புத்தகாலயம் எங்கும் வெகுவாகப் பரவுவதற்கு வேண்டிய வசதிகள் இக்காலத்தில் நிறைந்து கிடக்கிறதென்பதை யாவருமுணர்வர்.

இந்த வாக்கியத்தில் எழுவாய் பன்மையிலும், பயனிலை ஒருமையிலும் அமைந்துள்ளன.

இலக்கணப் பிழை இல்லாமல் எழுதிவிட்டால் மட்டும் போதாது. அதில் ஒரு தெளிவு இருக்கவேண்டும்.

காஞ்சிபுரம் மதிலோவியங்களைப் பற்றி எழுதிவரும்பொழுது ஒருவர் 'ஓவியச் சிறப்பும், அபூர்வமும், முகங்களில் காணப்படும் லக்ஷணங்களும், தேர்ந்த கைகளினால் திறமையான எல்லை வரைகள் வாய்த்திருக்கும் தன்மையும், கண்குளிரும் அருமையான வர்ணங்கள் திட்டியிருக்கும் வைபவமும் அவ்வோவியங்களின் கண்களிலிருந்து புலப்படும் கருத்துக்களுமே என்னைக் கவர்ந்துகொண்டன. பல்லவராசர்களின் அரையும் குறையுமாய் முடிவு கண்ணின் மேலே ஆத்மிகக் கண்களென்று காட்டிய இந்திய ஓவியங்களென்று வங்காளத்திற் கூத்தாடும் சில இரண்டு படங்களும் ஒருபுறம் ஞாபகத்திற்கு வந்தன' என்று கூறுகிறார். இந்தப் பகுதி எளிய நடையில்தான் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் வாசிப்பவர்களுக்கு இது எளிதில் விளங்காது. மயக்கத்தைக் கொடுக்கும் இதில் 'தெளிவு' இல்லை என்றே சொல்லவேண்டும். உரை நடையில் எளிமைக்கு அடுத்தபடியாகத் தெளிவு அவசியம்.

'சுழலும் காலசக்கரத்தில் எனது வாழ்க்கை கால்கழித்துச் சென்றிட இனி உங்களின் காலம் வருவதாயிற்று. மக்காள்! பரிபக்குவமடைந்தவர்களையும் பாசம் பற்றி வாட்டுமென்றால், மக்களைப் பெற்றெடுத்து மகிழ்ந்திருந்த எனக்கு அந்த வாஞ்சை இல்லாதிருந்திடுமா?' என்று எழுதுகிறார் ஒருவர்.

இவ்விதம் எழுதுவது பேச்சு வழக்கை ஒட்டியதே ஆகாது. இலக்கணத்தின் சிறப்பு விதிகளைக் கொண்டு நடையில் பிழையில்லை என்று நிரூபித்து விடக் கூடும். ஆனால் நடையில் இனிமை இல்லை. படிக்கும் போது ஒருவிதமான, விவரிக்க முடியாத, வெறுப்புத் தட்டுகிறது.

மேலே எடுத்துக் காட்டிய குறைகள் மிகவும் சாதாரணமானவை. எளிதில் நீக்கி விடக் கூடும். தமிழ்நாட்டுப் புதிய எழுத்தாளர்களிடையே அத்தகைய உணர்ச்சியும் தோன்றி இருக்கிறது. அவர்கள் எடுத்துக் காட்டிய குறைகள் சிலவற்றைப் பிறர் ஏற்றுக் கொண்டுமுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் மாறுவதால் உரை நடையிலும் பலவிதமான மாறுதல்கள் ஏற்படக் கூடும். அவை தமிழ் மொழியின் அடிப்படையான தன்மை அழகு ஆகியவற்றைக் கெடுத்து விடக்கூடாது. எழுத்தாசிரியர்களே அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு வாய்ந்தவர்கள்.

இன்றைக்குத் தவறாகக் கருதப்படுவது நாளைக்கு முறையாக மாறலாம். ஆனால் எழுதுபவர்கள் இன்றைக்கு உள்ள நிலையைக் கருதியே எழுத வேண்டும். நாளைக்கு முறையாகக் கருதி விடுவார்கள் என்று இன்றைய விதிகளை மீறிச் செல்லக் கூடாது. வேண்டிய காலங்களில் அவர்கள் புதிய புதிய விதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்த தமிழ் நடைக்கும் இப்பொழுது உள்ளதற்கும் மிகுந்த வேறுபாடு காணப் படும். தமிழ் உரைநடை வெகு தூரம் முன்னேறிவிட்டது. ஜீவன் பெற்று, உணர்ச்சி, வேகம், விறுவிறுப்பு ஆகியவை ததும்பி நிற்கின்றது.

(திருச்சி 15-4-41) —வானொலி

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்
புடவைகள்
இப்போது யாழ்ப்பாணத்திலொவ்வொருவீட்டிலும்
பேசப்படும் வார்த்தைகளாம்
ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.
ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

வேட்டிகள்	டிரில்லுகள்
சால்வைகள்	சூற்துணிகள்
சேலைகள்	ரசூர்கள்
சாரங்கள்	'ஷேட்' துணிகள்
கப்பாய்கள்	ஷீட்டுகள்
துவாய்கள்	பஞ்சணை உறைகள்
லோங்குளோத்ஸ்	மேசைத்துணிகள்
மல்லுகள்	பப்ளின்கள்
பெட்ஷீட்டுகள்	யன்னல்துணிகள்

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
Mis 127. 11-10-40—

சி. எம். சாமி
மன்மதக்
குளிகை
மிகுந்த
பலத்தையும்
ரத்த
விருத்தியையும்
உண்டாக்கும்
அநேக பரிசுகள் பெற்ற, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.
இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் தீர்க்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.
ஆர்டருடன் முன்பண மனுப்ப வேண்டும்
60 குளிகை ரூபா 5 20 குளிகை ரூபா 2
தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்
Y221 31-3-41 30.3.42

விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரை வு,ளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா
25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
(வி) காரியாதிகாரி.
(Y. 22. 1-11-40 to 31-10-41)

பத்திரக்கிரயம்
வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினத்திலும் வெளியிலும்
தமிழ் ரூபா 5.00 இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12.00
[illegible] பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 15.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

விளம்பர விகிதம்
முதன் முறைக்கு
ஒரு கலம் ரூபா 10.00 அரைக்கலம் ரூபா [illegible]
கால் கலம் ரூபா 6.00 ஒரு அங்குலம் ரூபா 1.00
அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி
[illegible]

இருமல், இளைப்பு
சுகமானவர்
மதிப்புரை
மரைக்காயர் டிரேப்பரி ஸ்டோர்
112, 2-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.
"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாச காசரோகயால் நான் இரண்டு வருஷ காலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். தண்டபாணி வைத்திய சாலையில் சென்ற 1938 செப்டம்பர் மாதத்தில் தாளக பஸ்பமும் சித்திர மூலச் சூரணமும் ரூபா 12 சதம் 50 க்கு வாங்கி 25 நாள் சாப்பிட்டேன். நோயின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன் பின்பு இதுவரை 2 வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை. திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள்வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19.10.40
(ஒப்பம்) E. A. M. S. மரைக்காயர்.
ஸ்ரீ M. S. மரைக்காயர்.
இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், தமேன் நோய்களுக்கு
25 நாள் தாளக பஸ்பம் } ரூ 12-50
,, நாள் மூலச் சூரணம் }
நோய் விபரம் எழுதவும் கேட்லாக் இனம்.
தண்டபாணி வைத்தியசாலை,
96 செட்டியார்தெரு, கொழும்பு
Mis 204 5-3-41 4-6-41

குயின்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறாத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
C/o S. Veeragathipillai & Sons.
(Y. 21. 11-8-40—10-8-41.)

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

மீ. 396

முதல் ஒலிபரப்பு

வெள்ளி ஜூன் 6

காலை 7-30 கீதாரம்பம் (இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 குரான் வாசகம் 8-00 கவ்வாலிகள் (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 தோத்திரங்கள் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 திரைகளிலிருந்து (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி டி. நாகம்மா பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய கீதம் 5-15 மைசூர் வி. வெங்கடகிரியப்பா வீணை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 'நாசோ நாசோ' (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 நாஜி விலங்குகள் 7-15 டி. கே. பட்டம்மாள் (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மைசூர் வி. வெங்கடகிரியப்பா வீணை 8-30 உலக விவகாரங்கள் 8-45 ஸ்ரீமதி டி. நாகம்மா பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

சனி ஜூன் 7

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திவ்யப்பிரபந்த விளக்கம் 8-00 பஜனை 8-15 டி. எஸ். ராகவராஜ பாகவதர் பாட்டு 8-25 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 தந்தி இசைகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. எஸ். நாகராஜ பாகவதர் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 நகைச்சித்திரங்கள் (இசைத்தட்டு) 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 ஸ்ரீமதி டி. வி. சாரதா பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 நாகஸ்வரம் (இசைத்தட்டு) 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்திச் சுருள் 7-15 தானவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மதராஸிலுள்ளபடி (சிலகலூடி வெங்கடேசுவர சர்மா பாட்டு 8-30 கால அறிவிப்பு 9-00 பிரிவு 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஜூன் 8

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் (இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 தேவாரதனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 தஞ்சாவூர் ஸ்ரீமதி ஜானகி அம்மாள் பாட்டு 9.00 'ஒலியுலா' 10 00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 எஸ். ஜி. கிட்டப்பா (இசைத்தட்டு) 1-15 எம். கே. தியாகராஜ பாகவதர் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 தஞ்சாவூர் ஸ்ரீமதி ஜானகி அம்மாள் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 பொறுக்த மணிகள் (இசைத்தட்டு) 2-30 ஒலிபரப்புமுடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய கீதம் 5-15 டி. கே. பாலகணேச ஐயர் புல்லாங்குழல் 6.05 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 எம். எஸ். சுப்புலக்ஷ்மி (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 தாய்மொழி 7-15 "சூரியபுத்திரி" 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 டி. கே. பாலகணேச ஐயர் புல்லாங்குழல் 8 30 தசரத கைகேயி சம்வாதம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஜூன் 9

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 வீணை (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸ்ரீமதி டி. ஸரஸ்வதி 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 செருகளத்தூர் சாமா (இசைத்தட்டு) 1.15 பி. எஸ். ராஜா ஐயங்கார் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி டி. டி. ஸரஸ்வதி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 ஒலிபரப்புமுடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய கீதம் 5-15 மருங்காபுரி ஜி. கோபால கிருஷ்ணய்யர் வயலின் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 என். சென்னகேசவய்யர் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 நம் யுத்த முயற்சி 7-15 வெண்ணிலா 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மருங்காபுரி ஜி. கோபால கிருஷ்ணய்யர் வயலின் 8-30 எங்கள் தபால் பெட்டி 8-40 என். சென்னகேசவய்யர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

வகுப்புக் கலகத்துக்கு நிவிர்த்தி

பம்பாய் வியாபாரிகட்குத் தேசாதிபதியின் உபதேசம்

பம்பாய், மே 31

பம்பாய் நகரில் வகுப்புக்கலகங்களை அடியோடு ஒழிப்பதற்கு மாகாண அரசாங்கத்தார் உறுதி கொண்டிருக்கின்றனரென்பதைப் பம்பாய்க்கவர்னர் இன்று அவரைப்பேட்டிகண்டுபேசிய பல வியாபாரிகளிடம் தெரிவித்துக்கொண்டனர்.

பம்பாய்நகரில் வகுப்புச் சச்சரவுகளைவிரைவில் ஒழித்துப் பழைய நிலைமைக்குக் கொண்டுவரவேண்டிய அவசியத்தையும் கவர்னர் வற்புறுத்தினர். வியாபாரிகளும் அதையே விரும்புகின்றனரென்பதில் தமக்குச் சந்தேகமேயில்லையென்றும் பழையபடி நகரில் அமைதியேற்படுவதற்கு மிஸ்டர் சர்ச்சில் லண்டன்மக்களுக்குச் சொன்னதுபோல் அமைதியாகவிருந்து காரியத்தைப் பாருங்கள் என்பதையேதாமும் அவர்களுக்குச் சொல்லுவதாகவும் கவர்னர் வர்த்தகர்களிடம் தெரிவித்தார்.

அமெரிக்க உணவு பிரிட்டன் வந்துசேர்ந்தது

லண்டன், மே 31

இரவல் சட்டத்தின் கீழ் ஐக்கியஅமெரிக்காவினால் அனுப்பப்பட்ட உணவுப் பொருள் நிறைந்தமுதலாவது கப்பல் இன்று பிருத்தானிய துறைமுகம் வந்து சேர்ந்தது. 1000 தொன் மாவும் 400 கீந அதிகமான முட்டைகளும் 1,20,000 றாத்தல் பாற்கட்டியும் இன்னும் வேறு பொருள்களும் அக்கப்பலில் ஏற்றப்பட்டிருந்தன.

அப்பொருள்கள் கப்பலிருந்து துரிதமாகக் கரையில் இறக்கப்பட்டு வருகின்றன.

பிருத்தானிய உணவுப்பொருள் மந்திரி லோர்ட் உல்டன் பிரபு அமெரிக்காவுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

நாகபுரி சபைத் தேர்தல்

காங்கிரஸுக்குப் பெருவெற்றி

54 ஸ்தானங்களில் 50-க்குப் போட்டியில்லை

நாகபுரி மே 29-

நாகபுரி ஜில்லா போர்டுத் தேர்தலில் காங்கிரஸ் பெருவெற்றி அடைந்திருக்கிறது. மொத்தம் 54 ஸ்தானங்களில் 50 ஸ்தானங்களைக் காங்கிரஸ் போட்டியின்றி அடைந்துவிட்டது. மற்றை நான்கு ஸ்தானங்களுக்குச் சமீபத்தில் தேர்தல் நடக்கும்.

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்
கள்சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y. 19 4-3-41—3-3-42

மலையுச்சியின் கொடுர வெய்யில்!

தாகசாந்தித் தருமம்

ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தில் கே. வி. மார்க்கண்டு மடத்துப் பக்கமாகச் சென்ற 11 வருடமாக அடியார்கட்குத் தாகசாந்திக்காக ஒரு தண்ணீர்ப்பந்தல் செல்வக் கதிர்காமம் போகும் வழிப்பாதையில் பெரியோர்களின் உதவியால் அடியேனும் நடைபெற்று வந்தது.



மேலும் அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்கிச் சுவாமி மலைக்குப் போகும் பழைய பாதையிலும் தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தாகசாந்தி அளிக்க நிச்சயித்துள்ளேன். ஆதலால் தர்மப் பிரபுக்கள் இயன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
தொண்டன்
சங்கரப்பிள்ளை முருகேசு,
(கொட்டைக்காடு) யாழ்ப்பாணம் தொல்புரம் சுளிபுரம்.

Mis 31 12.5.41 - 11.6.41

அரசாங்கச் சிப்பந்திகட்குச் செலவுச் சுருக்கமான உடை

மே. த. தேசாதிபதி வழிகாட்டுகிறார்

போதுஜனங்களேவரேனும் முன்னேற்பாட்டுடன் பேட்டிகாணவருஞ் சமயந்தவிர மற்றச்சமயங்களில் மே. த.தேசாதிபதி இராணிமாளிகையிலுள்ள தமது காரியால யத்தில் இனிமேல் அரைக்காற்சட்டை அல்லது முழுநீளக்காற்சட்டையுந் திறந்த ஷேட்டுமே அணிந்து கொண்டிருப்பார்.

குறிப்பிட்ட உத்தியோக ஆடைதான் அணியவேண்டுமென்ற கட்டாயமில்லாதிருப்பவரும் இதுவரை வழக்கமாக மேனாட்டு ஆடை அணிந்து வருபவருமான அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இனி மேல் தேசாதிபதி இராணி மாளிகையிலுள்ள தமது காரியாலயத்தில் உத்தியோகவேளையில் அணிந்துகொள்ள உத்தேசித்திருக்கிறபடி ஆடையணிந்து கொண்டால் போதுமான தென்றும் இந்த ஆடை யுத்தம்முடியும்வரை உத்தியோக உடையாக அங்கீகரிக்கப் பட்டிருக்கிறதென் றும் பிரதிபிரதம காரியதரிசி அரசாங்க இலாகாக்களுக்கு ஒருசுற்றறிக்கை விடுத்திருக்கிறார்.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆடைகளுக்காகவும் அவற்றின் சலவைக்காகவும் செலவுசெய்யும் பணத்தை மிச்சம் பிடித்து வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதைச் சமாளித்துக்கொள்ளவும் யுத்தநிதிக்கும் மற்றும் தருமச்செலவுகளுக்கும் அப்பணத்தை உபயோகித்துக் கொள்ளவும் சாத்தியமானகுறைந்த அளவுக்கு உடைகள் இறக்குமதியைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் வசதியாயிருக்கும் பொருட்டே மேற்கூறியபடி அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு புதியஆடை அங்கீகரிக்கப் பட்டிருப்பதாகக் குறித்த சுற்றறிக்கையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

சென்றவாரத்தில் நீஜின்றர் ஜெனரல் கந்தோர்ச் சிப்பந்திகள் அரைக்காற்சட்டையும் ஷேட்டும் அணிந்து கொண்டு வருவதற்கு மேலதிகாரியின் அநுமதியைப் பெற்றுக்கொண்டனர். இவ்விதமான ஆடையினாற் செலவு மிகவும் சுருங்கிவிடுகிறதென்று அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணதேவரும் பைரவி அம்மையாரும்

(1.ம் பக்கத் தொடர்ச்சி)

அழுதென மிசைக்தனர். இராமகிருஷ்ணரிடத்துத் தம் கடவுளை சேரிற் காணுதலால், தாம் வழிபட்டுவந்த சிலையை வணங்குவதில் இனிப் பிரயோசன மில்லையென்று அதனைக் கங்கையில் விட்டனர்.

(வரும்)

ஜவஹருக்கு அதிகக் கட்டுப்பாடுகள்?

அமெரியின் மறுப்பு

லண்டன் மே 29—

பண்டித ஜவஹர்லாலுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் சென்ற ஜனவரி மாதத்திலிருந்துப் பின் இன்னும் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன வென்று குறிப்பிடும் முறையில் இன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஸோரன்ஸன் ஒரு கேள்வி கேட்டார்.

அக்கருத்துத் தவறானதென்று மிஸ்டர் அமெரி பதிலளித்தார்.

பண்டித ஜவஹரை நடத்தும் முறை உண்மையிற் கேவலமாகவிருக்கிறதென்பதற்குத் தாம் ருசுக்கள் வெளியிட்டால் அவைபற்றி மிஸ்டர் அமெரி ஆலோசிப்பாரோவென மிஸ்டர் ஸோரன்ஸன் கேட்டார்.

இத்தகைய கருத்தடங்கிய அறிக்கையொன்றை நான் கவனித்தேன். இது பற்றி நான் விசாரித்திருக்கிறேன்.

இந்துக்கள் கையில்
இருக்க வேண்டியது
இந்துசாதனமே

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 5th June, 1941.